விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 183 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 05 புதன்கிழமை (19.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## மாடு கட்டச் சென்றவர் பாம்பு தீண்டியதில் மரணம்

### உரும்பிராயில் சம்பவம்

(கரணவாய்)
மாடு கட்டச் சென்றவர் புடையன் பாம்பு தீண்டியதில் உயிரிழந்துள்ளார். உரும்பிராய் வடக்கில் இச்சம் 15

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



### முத்தையன்கட்டுப் பகுதியில் சம்பவம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு முத்தையன் கட்டுப்பகுதியில் இடம்பெற்ற 15

### அடி காயங்களுடன்

## கிளி.நெத்தலியாற்றில் இளைஞனின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் உள்ள நெத்தலியாற்றில்சடலம்ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. 15

### பௌத்தத்தில் கைவைக்க

# தமிழ்த் தலைவர்களுக்கு உரிமை இல்லை

## லண்டனில் அநுர குமார



(லண்டன்)
பௌத்த சமயத்தில் கைவைக்க தமிழ்த் தலைவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என ஜே.வி.பி தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
(16ஆம் பக்கம் பார்க்க)

### பௌத்த மதத்துக்கு தீங்கு விளைவிக்கும்

# எந்தவொரு தீர்மானமும் ஏற்றுக் கொள்ளப்படாது



## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)
பௌத்த மதத்தின் இருப்புக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(மன்னார்)
மன்னார் பாலம்பிட்டிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதில் அதே பகுதியைச் சேர்ந்த 15

## நயினாதீவில் பௌத்த மாநாடு

(யாழ்ப்பாணம்)
நயினாதீவு ரஜமகா விகாரையில் பௌத்த மாநாடு ஒன்றுக்கு 15

### அரசியலமைப்புப் பேரவையால்

## ஜனாதிபதியின் யோசனை நிராகரிக்கப்பட்டது

(கொழும்பு)
சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவை நீடிப்பு தொடர்பான ஜனாதிபதியின் யோசனையை அரசியலமைப்புப் பேரவை 15

## யாழில் இடம்பெறும் வாள்வெட்டுக்கு பின்னால் இராணுவத்தின் மறைகரம்

### சபையில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வாள்வெட்டு மற்றும் ஆட்கடத்தல்களுக்கு பின்னால் இராணுவத்தின் மறைகரம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குற்றம் சுமத்தியுள்ளார். 15

## ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் பாராளுமன்றம் முன்பாக போராட்டம்



### போராட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை பிரயோகம்

(கொழும்பு)
ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாராளுமன்றத்துக்கு முன்பாக எதிர்ப்புப் 16

### தந்தையின் அந்தியேட்டிக் கிரியைக்காக

## கனடாவிலிருந்து யாழ்.வந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)
தந்தையின் அந்தியேட்டிக் கிரியைக்காக கனடாவிலிருந்து யாழ்.வந்த குடும்பஸ்தர் ஒருவர் திடீர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார். புத்தூர் கிழக்குப் 16

நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரையுள்ள விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

பதிவு இல:- PA.56. 12.09.1972

### நவீன அரிசியாலை குத்தகை அடிப்படையில் வழங்குதல்

எமது சங்கத்திற்கு வள்ளுவர்புரம் விசுவமடுவில் அமைந்துள்ள அரிசி ஆலை தொழிற்சாலையும் அதனுடன் இணைந்த இரண்டு நெற்களஞ்சிக் கட்டடம் சொத்துக்கள் என்பவற்றையும் மூன்று வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் நிபந்தனைகள் அடிப்படையின் கீழ் தகுதியான ஆர்வமுடைய வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. குத்தகை முற்பணமாக ஆகக் குறைந்த தொகையாக ரூபா அறுபத் தைந்து இலட்சம் (ரூபா 6.5மில்லியன்) எதிர்பார்க்கப்படுகின்றது.

02. மாதக் குத்தகையாக ஆகக் குறைந்தது ரூபா மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 350,000.00) எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னராக விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாதாந்தம் குத்தகைப் பணம் வழங்கப்பட வேண்டும்.

03. குத்தகைக்கு கொள்பவர் வேறு நபர்களுக்கு / நிறுவனங்களுக்கு உப ஒப்பந்தம் மூலமோ அல்லது வேறு வகையிலோ கை மாற்ற முடியாது.

04. குத்தகை ஒப்பந்தம் முடிவுறுத்தல் தொடர்பிலும் அரிசி ஆலைத் தொழிற்சாலை தொடர்பான திருத்தம் பராமரிப்பு ஏனைய விடயங்கள் தொடர்பிலும் தெளிவான எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்று இரு தரப்பாலும் கைச்சாத்திடப்படும்.

05. அரிசி ஆலையை வாடகைக்குப் பெற்றுக்கொள்பவர், சங்கத்தின் அனுமதியின்றி காணி கட்டடத்தில் மேலதிக வேலைத்திட்டங்களாக நிரந்தர இணைப்புக்கள் எதனையும் செய்ய முடியாது எனவும் அவ்வாறு செய்யின் சங்கத்தின் எழுத்து மூல அனுமதியுடன் மட்டுமே செய்யும் ஏற்பாடு.

06. அரிசியாலையை வாடகைக்குப் பெற்றுக்கொள்பவர், அங்குள்ள தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் என்பவற் றைப் பொறுப்பேற்கும் போது பட்டியலிட்டுப் பெற்றுக்கொள்வதுடன் ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் அதே பொருட்களை இயங்கு நிலையில் மீளக் கையளிப்பதை உறுதிப்படுத்துதல்வேண்டும் என்று ஏற்பாடுகள்.

07. ஒப்பந்த காலத்தில் அரிசி ஆலை வளாகத்தில் சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக்கூடிய செயற்பாடுகள் அல்லது சமூக விரோத செயற்பாடுகள் இல்லாத வகையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை வாடகைக்குப் பெற்றுக்கொள்பவருக்கு சங்கம் வலியுறுத்த வேண்டும்.

08. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்துவ பணியாளர்களின் பொருளாதார நலவுருத் துக்கள் பாதிக்கப்படாத வகையிலும் கிடைக்கப் பெறுவதையும் உயர் வான மட்டத்திலும் பேணப்படுவதையும் உறுதிப் படுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அரிசி தங்களின் தெளிவான இயலுமையை பூரணமாக வெளிப்படுத்தி எதிர்வரும் 19.07.2024ஆம் திகதி மதியம் 12 மணிக்கு முன்னர் எனக்கு கிடைக்கக் கூடியதாக கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி விடயம் தொடர்பில் விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர் சபையின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதும் ஆகும்.

**குறிப்பு**

01. இத் தொழிற்சாலை உடன் செயற்படுத்தக் கூடிய நிலையில் காணப்படவில்லை இந்நிலையில் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளும் திறத்தவரே அரிசி ஆலை தொழிற்சாலையை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு ஏதுவான விடயங்களை கையாள வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

02. குறித்த தொழிற்சாலையை நேரடியாக சென்று பார்வையிட விரும்பின் தலைவர் அல்லது பொதுமுகாமையாளருடன் கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

03. மூன்று வருடங்களின் பின்னர் இருதரப்பினர் சம்மதத்துடன் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படலாம்

தலைவர்,
விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
விசுவமடு,
முல்லைத்தீவு.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**யோகேஸ்வரி அருளானந்தம்**


இன்றிருந்தார் நாளை இல்லாதிருப்பது
நியதி எனினும் நல்லவர்க்கும் அல்லவர்க்கும்
நன்மை மட்டுமே நாடிய நீயேன் சென்றாய்...

பழமுதிர்ச்சோலை,
காரைநகர்.

(C-0625)

துயரினால் வாடும் அன்புச் சகோதரி
தனலட்சுமி தர்மகுலசிங்கம்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



எமது அன்புத் தெய்வம்

**அமரர் கந்தையா கனகசபை**

(ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்
- இலங்கை வங்கி )

திதி 19.06.2024 (புதன்கிழமை)

மீளாத்துயில் கொண்டு நான்காண்டு கடந்தாலும்
ஆறவில்லை எம் மனது
தீராத்துயரில் தவிக்கின்றோம் நாம் இங்கு
பாராட்டி சீராட்டி பாசமாய் வளர்த்தீரே பாதி வழியில்– எம்மை
பரிதவிக்க விட்டு விட்டுச் சென்றதென்ன, குடும்பத்தின் ஆணிவேராய்
வழிகாட்டி வாழ்ந்தவரே – நீங்கள்
நீறாகிப்போனாலும் உங்கள் வழித்தடத்திலேயே – நாம்
என்றென்றும் தொடர்ந்திடுவோம் இன்னும் ஆண்டாண்டு காலம்
கடந்தோடிப்போனாலும்– உங்கள் புன்னகை பூத்த முகம் – எங்கள்
நெஞ்சோடு வாழ்ந்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

தோற்றம் 18.03.1946 | மறைவு 03.07.2020

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

(1268)

## அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

தோற்றம் 1943 . 03 . 10



மறைவு 2024 . 05 . 21

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் சுப்பர்மடம்
பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் முத்துக்குமார் சின்னக்கிளி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 20.06.2024 நாளை வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தி யேட்டி மடத்தில் நடைபெற்று அஸ்தி சுப்பர்மடம் புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அந்நிகழ்விலும் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டிகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

(9600)

தகவல்: பிள்ளைகள்
மு.உதயகுமார், மு.விஜயகுமார்(குட்டி), மு.இரத்தினகுமார்,
மு.சந்திரகுமார்(சந்திரன்), யோ.உதயகுமாரி(சொக்கம்மா),
சி.விஜயகுமாரி(கலைச்செல்வி),மு.பிறேம்குமார்(பிறேம்),
மு.கிருஸ்ணகுமார்(பிறதி)லண்டன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இந்திய அரசே எம்மையும் வாழவிடு’

# இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிட்ட மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

**இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறும் இந்திய இழுவைப் படகை தடுத்து நிறுத்த வலியுறுத்தி யாழ்.இந்திய துணைத் தூதரகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள்.**




யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.சென் பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையிலுள்ள மருதடிச் சந்தியில் இருந்து, துணைத் தூதரகம் வரை பேரணியாகச் சென்று தூதரகம் முன்பாக கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது இலங்கை கடற்படையே அத்துமீறலை தடுத்து நிறுத்து, கடற்றொழில் அமைச்சர் கண்ணை திறந்துபார்,

இந்திய அரசே எம்மையும் வாழ விடு, ஸ்ரீலங்கா காவல்துறையே எங்களை தடுக்காதே உள்ளிட்ட பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றை மீனவர் சங்கப் பிரதிகள் துணைத்தூதரகத்தில் கையளித்தனர்.

போராட்டம் காரணமாக சுமார் இரண்டு மணி நேரம் மருதடி வீதி ஊடான போக்குவரத்தை பொலிஸார் தடை செய்து, வீதியின் குறுக்கே வீதித் தடைகளைப் போட்டுப் பாதுகாப்பைப் பலப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## தேர்தல் திகதி குறித்த அறிவிப்புகளை யாரும் வெளியிட வேண்டாம்

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தல்கள் குறித்து அரசமைப்பின் அடிப்படையில் நாங்களே முடிவுகளை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எல்.ஏ.எம். ரத்நாயக்க ஏனையவர்கள் இது குறித்து கருத்து தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க செப்டெம்பர் 2 முதல் ஒக்டோபர் ஐந்தாம் திகதிக்குள் தேர்தல்கள் இடம்பெறும் என தெரிவித்துள்ளார்,

சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன்பெர்ணாண்டோ ஒக்டோபர் ஐந்தாம் திகதி தேர்தல் வாக்களிப்பு தினம் என குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள தேர்தல் ஆணையாளர் அரசமைப்பின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவே இது குறித்து தீர்மானிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஜூலை 17 ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி தேர்தல் குறித்து தீர்மானிப்பதற்கான வலு எங்களிற்கு கிடைக்கும் என தெரிவித்துள்ள அவர் செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு உட்பட்ட எந்தவொரு நாளிலும் தேர்தல்கள் இடம்பெறலாம் எனவும் தெரிவித்துள்ளார். (நி-6)

## அரச வைத்தியசாலைகளை நாடுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை மக்கள் பெரும்பாலும் அரச வைத்தியசாலைகள் மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளில் மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நாட்டம் காட்டுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாட்டின் பிரஜை ஒருவர் வருடத்திற்கு சுமார் ஆறு தடவைகள் வைத்தியசாலைக்கு வருகை தந்து மருத்துவ சேவையினைப் பெற்றுக் கொள்கின்றார்.

முதியோர்களை அதிகளவில் கொண்ட நாடாக இலங்கை காணப்படுகின்றது. பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கை மக்கள் பெரும்பாலும் வைத்தியசாலைகள் மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளில் மருத்துவ சேவைகளைப் பெற நாட்டம் காட்டி வருகின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-6)

## சடுதியாக அதிகரித்த போஞ்சி விலை

(கொழும்பு)

இலங்கையில் மரக்கறிகளின் விலை சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் ஒரு கிலோகிராம் போஞ்சி 1000 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 500 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கிலோகிராம் கரட் மற்றும் லீக்ஸின் விலை 600 ரூபாய் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நாட்டில் 1000 ரூபாய் வரையில் சடுதியாக அதிகரித்துள்ள போஞ்சியின் விலை மக்களுக்கு வியப்பளிப்பதுடன் மரக்கறிகளின் விலை உயர்வு மக்களுக்கு சுமையாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஜூலை 15 இல் மின்கட்டண திருத்தம்

(கொழும்பு)

இந்த ஆண்டின் இரண்டாவது மின் கட்டண திருத்தம் ஜூலை 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தகவலை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ நேற்று தெரிவித்துள்ளார். இதன்படி உத்தேச மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் எழுத்துமூலமான கருத்துக்கள் ஜூலை 8ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் வாய்மூலமான கருத்துக்கள் ஜூலை 9ஆம் திகதி நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த முறை மேற்கொள்ளப்படவுள்ள கட்டண திருத்தத்தில் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளது. அதன்படி, குறைக்கப்பட்ட கட்டணத்தின் சதவீதங்கள் ஜூலை 15ம் திகதி அறிவிக்கப்படும். (நி-6)

## புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 22 மில்லியனாக அதிகரிக்கும் வாய்ப்பு

(கொழும்பு)

உலகில் 18 மில்லியனாக இருக்கும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் 22 மில்லியனாக அதிகரிக்கும் என இலங்கை புற்றுநோய் சங்கத்தின் கண்டி கிளையின் மனநல மருத்துவர் யோகா அந்தோனி தெரிவித்துள்ளார்.

புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்ற போதிலும் விழிப்புணர்வினால் அதனை கணிசமான அளவில் கட்டுப்படுத்த முடியும் என இலங்கை புற்றுநோய் சங்கத்தின் கண்டி கிளையின் மனநல மருத்துவர் யோகா அந்தோனி தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டச் செயலாளர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற புற்று நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வாய்ப்புற்றுநோய் வெற்றிலை உண்பதனாலும் ஏற்படுவதாகவும், புகைப்பிடிப்பதினால் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் மதுபானம் மற்றும் ஆரோக்கியமற்ற உணவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் உணவுக்குழாய் மற்றும் குடல் தொடர்பான புற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முன்கூட்டியே நோயாயை கண்டறிவதன் மூலம் மூன்றில் ஒரு பங்கு நோயாளிகளை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்


## தேசிய மட்ட சைக்கிள் ஓட்டம் சம்பியனான வடமாகாணம்




தேசிய மட்ட ஸ்ராண்டற் சைக்கிள் ஓட்டத்தில் வடமாகாண அணியினர் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். தேசிய மட்ட பெண்களுக்கான 80 கிலோ மீற்றர் கொண்ட ஸ்ராண் டற் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் பதுளை மையங்கனையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த யாழ் மாவட்ட வீராங்கனைகளான பி.தனு சுயந்தினி, ஜெ.தர்மிலாரஷி, எஸ். ரெஜீனா ஆகியோரும் முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனை என். ராதிகா ஆகியோரும் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துச் சாதனை படைத்துள்ளனர்.(நி-6-90)

## யாழில் இடம்பெற்ற தடகள விளையாட்டு




வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் பொலிஸாரிடையே வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி டீ.சூசைதாசன், யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஏ.சி.தனபால, யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன்,

யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்.போதனா மருத்துவமனையின் சட்ட வைத்திய அதிகாரி சி.பிரணவன் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர். (நி-6-30)

## பெல்ஜியம் அணி அதிர்ச்சி தோல்வி



சுலோவாகியாவுக்கு எதிரான “யூரோ” கால்பந்து போட்டியில் பெல்ஜியம் அணி தோல்வியடைந்தது.

ஜேர்மனியின் பிராங்பர்ட் நகரில் நடந்த “யூரோ” கோப்பை கால்பந்து “இ” பிரிவு லீக் போட்டியில் உலகின் “நம்பர்-3” பெல்ஜியம் அணி, 48 ஆவது இடத்தில் உள்ள சுலோவாகியா அணியை எதிர்கொண்டது.

ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் ரோமேலு லுகாகுவின் கோலடிக்கும் முயற்சி தடுக்கப்பட்டது. பின் 7ஆவது நிமிடத்தில் சுலோவாகியா அணியின் இவான் ஷ்ரான்ஸ் ஒரு கோல் அடித்தார். முதல் பாதி முடிவில் சுலோவாகியா அணி 1-0 என முன்னிலை வகித்திருந்தது.

இரண்டாவது பாதியின் 87 ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் லுகாகு அடித்த கோல், “வார்” தொழில்நுட்பத்தால் திரும்பப்பெறப்பட்டது. கடைசி நிமிடம் வரை போராடிய பெல்ஜியம் அணியினரால் கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் சுலோவாகியா 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (நி-6-90)

## கிண்ணத்தை சுவீகரித்தது யாழ்.மாவட்ட அணி



வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் ஆட்ட ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்தி யாழ் மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது.

வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ் மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ் மாவட்ட அணி ஆட்ட நேர முடிவில் 58:28 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (நி-6-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலை குறைப்பில் இடையூறு

(கொழும்பு)

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையை நுகர்வோருக்கு நன்மை ஏற்படும் வகையில் குறைக்க முடியுமான போதிலும் அதற்குச் சட்ட விரோத வர்த்தகக் குழுக்கள் இடையூறாக இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த குற்றச்சாட்டை அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் முன்வைத்துள்ளது.

இதனடிப்படையில், இது தொடர்பான உண்மையை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு தமது சங்கம் அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோதுமை மா, தேங்காய் எண்ணெய் மற்றும் முட்டை உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளுக்கு தேவையான பொருட்கள் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இது தமது தொழிற்துறையைப் பாரியளவில் பாதித்துள்ளதாலேயே வெதுப்பக உற்பத்திகளின் விலையினைக் குறைக்க முடியாதுள்ளது.

கோதுமை மாவின் விலையினை மேலும் 30 ரூபாயினாலும் மற்றும் முட்டை ஒன்றின் விலையை 20 ரூபாயினாலும் குறைக்க முடியும். இருப்பினும் சட்டவிரோத வர்த்தக குழுக்கள் அதில் இலாபம் ஈட்டும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இது தொடர்பில் விளக்கமளிப்பதற்கு சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கோரி ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# எத்தடை வந்தாலும் வழிபாட்டை கைவிடோம்

ரவிகரன்



(நெளுக்குளம்)

பௌத்த பிக்குகளுடைய நடவடிக்கைகளுக்கு துணை போகின்றவர்களாகத்தான் அரசாங்கத்தை சேர்ந்த இனவாதிகள் இருக்கின்றார்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

குருந்தூர்மலை பகுதியில் அமைந்துள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் நேற்று வழிபாட்டினை மேற்கொண்ட பின்னர் ஊட கங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை விடயம் ஏற்கனவே பூதாகரமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.


எங்களுடைய வரலாறுகள் இங்கே இருக்கக்கூடியதாக தொல்லியல் திணைக்களமும், பௌத்த பிக்குமாரும் சேர்ந்து தொல்லியல் தொடர்பான நடவடிக்கைகளை செய்கின்றோம் என்று கூறி பௌத்த விகாரையை அமைத்திருந்தார்கள்.

இதனை நீதி மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றமையால் நிறுத்தப்பட்டதுடன் எமக்கு வழிபடலாம் என தீர்ப்புக்கள் கூறினாலும் அதற்குரிய முடிவுகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

இதற்குரிய தீர்வானது மிக விரைவில் கிடைக்க வேண்டும். அத்துமீறி விகாரை அமைத்ததற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

மேலும் எங்களுடைய மதத்தின் வழிபாட்டினை நாங்கள் மேற்கொள்வதற்கு எத்தடை வரினும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என மேலும் தெரிவித்தார் (நி-6-299)

## கண்ணீர் அஞ்சலி



யா/பத்தைமேனி இரட்னேஸ்வரி வித்தியாலய அதிபர் திரு. இ.சிமித் அவர்களின் அன்புத் தாயார்

அமரர். இன்பநாதன் இரஞ்சிதமலர்

அவர்கள் 16.06.2024 அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-619)

கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும்
கோப்பாய் கல்விக் கோட்டம்

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

19.06.2024



தோற்றம்: 18.04.1943 மறைவு: 22.06.2021

அமரர்
துரையர் சந்தனம்

(ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (விசேட தரம்)
திதி: பூர்வபக்க திரயோதசி



தோற்றம்: 11.04.1946 மறைவு: 10.01.2022

அமரர்
சரஸ்வதி சந்தனம்

திதி: பூர்வபக்க அட்டமி

என்றும் உங்கள் அன்பான நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் நாம் (சி-620)

"சந்தனம் சரஸ்வதி இல்லம்"
இல.96, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

நினைவோடு வணங்கி நிற்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# இராசிபலன்

19.06.2024
ஆனி 05, புதன்கிழமை
துவாதசி காலை 6.55 மணிவரை

சுபநேரம் 4.24-5.54மணி வரை
இராகுகாலம் 11.54- 01.24 மணிவரை
பிரதோசவிரதம், சித்தாமிர்த விரதம்.

சந்திராஷ்டமம்-
உத்திரட்டாதி. ரேவதி

வளவன்

**மேஷம்** – மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்** – அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கி கொள்ள முற்படுவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முற்சிகள் கைகூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** – உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** – பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பயணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** – இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** – தொழிலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வாகன சுகமுண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகலாம், குடும்பத்தினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** – நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** – தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** – நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.

**தனுசு** – திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மீனம்** – சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தித்திக்கும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

எல்லோரும் பார்த்து இரசிக்கும் மலர்போல் வாழக் கற்றுக் கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் நால்வர் கைது


(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் மீன் பிடித்த குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகையும் அதிலிருந்த நான்கு இந்திய மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு கைதானவர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத் திடம் ஒப்படைத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர். (நி-6-33)

# கண்காணிப்புக்கு மத்தியில் குருந்தூரில் சிவ வழிபாடு



(நெளுக்குளம்)

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் பொலிஸார், இராணுவப் புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கு மத்தியில் சிவ வழிபாடு நேற்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு குமுழமுனை தண்ணிமுறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள குருந்தூர் மலை பகுதியில் அமைந்துள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் வழிபாடுகள் தொடராக இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் சிவனைத் தரிசிப்பதற்காக ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலர் நேற்றுக் காலை 10 மணியளவில் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.


குறித்த வழிபாட்டில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஞா.யூட்சன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இ.ஜெகதீசன், ஆலய நிர்வாகத்தினர் என பலரும் கலந்து பொலிஸார், இராணுவ புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கு மத்தியில் சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். தொல்லியல் துறையினரின் அறிவுறுத்தலுக்கமைய சேதம் ஏற்படுத்தாத வண்ணம் வழிபாடுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)

# நெல்லியடி வாணிபர் கழக கௌரவிப்பு விழா

(கரணவாய்)

கரவெட்டி நெல்லியடி வாணிபர் சங்கத்தின் கௌரவிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு புறாப்பெருக்கியிலுள்ள யாழ்.பீச்ஹோட்டலில் நெல்லியடி வாணிபர் கழகத் தலைவர் சி.சிவம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் தமிழ்த்துறை பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, காங்கேசன்துறைப்பிரிவு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகே, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை செயலாளர் கம்ஸநாதன். கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஜி.செந்தூரன் மற்றும் கட். நெ.ப. நோ.கூ.சங்கத் தலைவர் கலாநிதி ஐ.யோக ராசா, கௌரவ விருந்தி னர்களாக தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் மற்றும் சிவபூமி அறக்கட்டளை நிறுவுனர் கலாநிதி.ஆறு.திருமுருகன், யாழ்.போதனா மருத்துவமனை நரம்பியல் சத்திர சிகிச்சை வைத்தியநிபுணர் எஸ்.பி. ஆதித்தன் யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் தொழிலதிபர் கலாநிதி. இ.எஸ். பி.நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-60)



சர்வதேச யோகா தினத்தினை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகமும் யாழ். பல்கலைக் கழக விளையாட்டுத்துறை பிரிவினரும் இணைந்து நேற்று யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளுக்கு யோகா விழிப்பூட்டல் செயலமர்வு இடம் பெற்றது.

# மதுபோதையில் மகனைத் தாக்கிய தந்தை
## மலையாளபுரத்தில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மலையாள புர பகுதியில் தந்தையின் தாக்குதலில் காயமடைந்த மகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மது போதையிலிருந்த தந்தை மகனின் தலையைத் தாக்கிய நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் பாடசாலையின் பதில் அதிபர் சுதாகரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பழையமாணவனும் இருதய மருத்துவ நிபுணருமான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மனோமோகன மற்றும் மருத்துவர் கௌரி மனோமோகனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை இந் நிகழ்விற்கு ஆசியுரையினை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளதுடன் நினைவுப் பேருரையை பழைய மாணவனும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக முகாமைத்துவப்பீட பொதுசன நிருவாகத்துறைத் தலைவர் கலாநிதி.மா. ரூபவதன் ஆற்றவுள்ளார். (நி-6-33)



சாவகச்சேரி-சங்கத்தானை நாமகள் முன்பள்ளியின் சிறுவர் சந்தை நிகழ்வு அண்மையில் முன்பள்ளி வளாகத்தில் இடம் பெற்றது. இதன்போது முன்பள்ளிச் சிறார்கள் சந்தை வியாபாரிகள் போன்று உடையணிந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். (படம்-குபேசன்)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 300 | 300-500 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 240 | 200 | 185 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 120-180 | 200 |
| தக்காளி | 700 | 750 | 600 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 140 | 120 | 200 |
| கோவா | 300 | 350 | 250 | 250 | 320 |
| கரட் | 350 | 450 | 500 | 320 | 500 |
| பூசணி | 180 | 160 | 150 | 150 | 160 |
| புடோல் | 300 | 300 | 250 | 200 | 320 |
| வாழைக்காய் | 180 | 160 | 120 | 120-140 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 460 | 300 | 300-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 800 | 800 | 1200 | 700 | 1200 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 340 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 300 | 200 | 250-300 | 200 |
| லீக்ஸ் | 700 | 600 | 600 | 400 | 800 |
| பீற்றூட் | 800 | 450 | 700 | 300 | 800 |
| கறிமிளகாய் | 700 | 700 | 500 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 450 | 250-600 | 800 |
| போஞ்சி | 800 | 800 | 700 | 450 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 120 | 120-150 | 120 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 800-1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 500 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 480 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 180 | 200 | 200 | 100 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 90 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 160 | -- | 120 | 80 | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனானது

## சண்டிலிப்பாய் உதய சூரியன்



(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தினை வீழத்தி சண்டிலிப்பாய் உதய சூரியன் அணி சம்பியனானது.

யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் வெள்ளி விழா கிளித்தட்டு சுற்றுப் போட்டியின் நிறைவுப் போட்டியும் விருது வழங்கலும் நேற்று முன்தினம் இரவு சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் மைதானத்தில் மின்னோளியில் இடம்பெற்றது .

யாழ்ப்பாண தாச்சி விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இப்போட்டியில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருந்தன.

விறு விறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சண்டிலிப்பாய் உதயசூரியன் கழகத்தினர் வெற்றி பெற்றனர். இவ்விருது வைபவத்தில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொண்டு வெற்றிக்கேடயங்களையும் விருதுகளையும் வழங்கிவைத்தார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா:17 1/2<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்:Bsc Software Engineer and Mobil Software Hardware Technician,Phone Shop(Own)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/11302 | பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 18<br>உயரம்: 5'2'<br>தகைமை/தொழில்: Bsc பட்டதாரி, Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம்<br>தொ.இ: G/11971 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 50 1/4<br>உயரம் :5'11"<br>தகைமை/தொழில்:Bachelor of Social Work, Development Officer<br>எதிர்பார்ப்பு-பட்டதாரி.அரச தொழில்பார்க்கும் பெண்<br>தொ.இ: B/12488 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Bsc in Engineering, Civil Engineer<br>எதிர்பார்ப்பு: Degree Holder<br>தொ.இ: G/12837 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: MIT, Project Manager (Canada)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் .(கனடா)<br>தொ.இ: B/14309 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>செவ் 7 இல்<br>கி.பா: 30<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, DO(gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/13551 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# நெல்லியடி வாணிபர் கழகம்


நெல்லியடி வாணிபர் கழக அனுசரணையில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் வர்த்தக சேவையைப் பூர்த்தி செய்தவர்களையும் அவர்களுடைய சமூக பணிகளையும் பாராட்டும்

## கௌரவிப்பு விழா


சி.சிவம்
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
(80 வருடம்)


மா.அழகேசன்
அழகர் பல்பொருள் வாணிபம்
(64 வருடம்)


த.இரவீந்திரன்
திசா களஞ்சியம்
(64 வருடம்)


சி.கனேசலிங்கம்
தமிழ் பூங்கா பதிப்பகம்
(60 வருடம்)


ப.தயாபரன்
சிவசக்தி இரும்பகம்
(54 வருடம்)


சு.சண்முகசுந்தரம்
செல்லமுத்தாஸ் புடவை மாளிகை
(53 வருடம்)


ஐ.யோகநாதன்
சுபாஸ் பேக்கரி
(50 வருடம்)


அ.மாக்கிரட் மெலனி
மொடோர்ண் ஸ்ரோர்ஸ்
(33 வருடம்)


ஆ.பிரபாகரன்
ஒளியருவி டிஜிற்றல் கலர் லாப்
(29 வருடம்)


வ.மயூரன்
மருதம் இரும்பகம்
(28 வருடம்)


ம.ஜேம்ஸ்கரன்
றூவின் பல்பொருள் வாணிபம்
(27 வருடம்)


மா.மகேந்திரன்
நிதுஷா ஸ்ருடியோ
(26 வருடம்)


சி.தயாபரன்
றீகல் வைன் ஸ்ரோர்ஸ்
(26 வருடம்)


தெ.சுதர்சன்
கனேசன் ஹாட்வெயர்
(25 வருடம்)


சி.தங்கராசா
தங்கம்ஸன்
(25 வருடம்)

கௌரவிப்பு விழா
2024

தலைமை
சி.சிவம்
(தலைவர்,நெல்லியடி வாணிபர் கழகம்)

இடம் : யாழ்.பீச் ஹோட்டல்
காலம் : 19.06.2024 புதன்கிழமை
நேரம் : பி.ப 06.30 மணி

பிரதம விருந்தினர்
கௌரவ P.S.M. சாள்ஸ்
(ஆளுநர், வடக்கு மாகாணம்)

நிகழ்வுகள்
- மங்கல விளக்கேற்றல்
- வரவேற்புரை
- தலைமை உரை
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர்கள் உரை
- வர்த்தகர்கள் கௌரவிப்பு
- சான்றோர் கௌரவிப்பு
- நன்றியுரை
- விருந்துபசாரம்

சிறப்பு விருந்தினர்கள்
பேராசிரியர் சி.சிவலிங்கராசா
(வாழ்நாள் பேராசிரியர்)
சந்தன கமகே
(சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காங்கேசன்துறை பிரிவு)
க.கம்ஸநாதன்
(செயலாளர்.வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை)
Dr.G.செந்தூரன்
(சுகாதார வைத்திய அதிகாரி-கரவெட்டி)
கலாநிதி.ஐ.யோகராசா
(தலைவர், கட்.நெ.ப.நோ.கூ.சங்கம்)

கௌரவிப்பு விருந்தினர்கள்
கலாநிதி. ஆறு.திருமுருகன்
(தலைவர்.தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)
தலைவர்.சிவபூமி அறக்கட்டளை நிறுவனம்
வைத்திய நிபுணர் S.P.ஆதித்தன்
(நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர்)
யாழ்.போதனா வைத்தியசாலை
Dr.ஆ. கேதீஸ்வரன்
(பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்)
யாழ்.மாவட்டம்
கலாநிதி E.S.P.நாகரத்தினம்
(பிரபல தொழிலதிபர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நெல்லியடி வாணிபர் கழகம்.

(சி-617)


வாழ்த்துவோர்

| | | | |
| --- | --- | --- | --- |
| | மக்கள் வங்கி நெல்லியடி | கொமர்ஷல் வங்கி நெல்லியடி | சம்பத் வங்கி நெல்லியடி |
| செலான் வங்கி நெல்லியடி | ஹட்டன் நஷனல் வங்கி நெல்லியடி | NTB வங்கி நெல்லியடி | NDB வங்கி நெல்லியடி |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களின் மணிவிழா சிற

### நல்லை ஆதீனகுருவின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு.பொன்னையா ரவிச்சந்திரன்அவர்கள் தம் சேவைக் காலம் மகத்தானது. ஆசிரியராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக, வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலங்களில் அர்ப்பணிப்பு மிகு சேவை நல்கியவர்.

இன்முகத்தோடு பழகும் பண்பாளன். கல் விப்புலத்திற்கு நல்கிய சேவைகள் என்றும் மனங்கொள்ளத் தக்கது. இவரது சேவையினைப் பாராட்டி ஓய்வுக்காலம் இனிதே சிறப்புற அமைய இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன். விழா ஏற்பாட்டாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,**


### குருவருளும் திருவருளும் கிடைக்கட்டும்



கல்விமான்கள் பூமியில் ஜனனம் செய்கின்றமை இறையருளே. அதேபோல் திறமை, நன்னடத்தை, பண்பாடல், வார்த்தை தவறாமை ஆகிய நற்பண்புகளைக் கொண்ட பண்பாளன். கல்விப் பணியில் ஓய்வு பெற்றாலும் தனது கல்விச் சேவையை உயிராக மதித்து மற்றவர்களையும் தன்னைப்போல் கல்வியாளர்களாக உயர்த்த பாடுபட்டு வரும் அவர் அதில் தொடர்ந்தும் ஈடுபடுவார் என்பதில் ஐயப்பாடுகள் இல்லை . பெருமைக்குரிய கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் அவர் தம் சேவையை நிறைவு செய்யும் காலத்தில் குடும்பத்தினருடன் சிறப்புடன் வாழ ஆசி வழங்கி குருவருளும் திருவருளும் கிடைக்க நல்லாசி வழங்குகின்றேன்.

**விசாலாட்சி சமேத காசி விஸ்வநாத தேவஸ்தான பிரதமகுரு,
சிவ பிரம்ம ஸ்ரீ சான ஜெய சங்கர சிவாச்சாரியார்,
சிவன் கோவிலடி, வட்டுக் கோட்டை.**

### செஞ்சொற் செல்வரின் ஆசியுரை



யாழ்.கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி ஓய்வுபெறும் உயர்திரு பொ.ரவிச்சந்திரன் அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன்.

முதுபெரும் புலவர் வட்டுக்கோட்டை நல்லதம்பி அவர்களின் கல்விப் பாரம்பரியம் மிக்க கலைக்குடும்பத்தில் பிறந்து சிறந்த கல்வியாளனாக திகழ்ந்து ஓய்வுபெறும் மணிவிழா நாயகன் நலனே சிறக்க துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறேன். கடவுள் பக்தியும் கலைகளில் ஆர்வமும் கடமையுணர்வும் மிக்க இவர் பல கல்வி வலயங்களில் பணியாற்றி பலரது பாராட்டுப் பெற்றவர். நேர்மையான சுபாவம் கொண்டவர். அன்னார் சிறந்த கல்விச் சேவையை ஆற்றி ஓய்வு பெறுகிறார். இவர் ஓய்வுக் காலத்தில் சிறந்த சமூக சேவைகளை ஆற்றி சமூகத்துக்குத் தொடர்ந்து பணிசெய்ய வேண்டும் என வேண்டி எனது ஆசிச் செய்தியை நிறைவு செய்கிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பளை,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்.**

### பல்துறைகளிலும் வெற்றிகண்ட மகான்



2024 ஜூன் 19 ஆம் திகதி அறுபது ஆண்டுகளை நிறைவு செய்யும் பொன்னையா ரவிச்சந்திரனுக்கு வாழ்த்துக்களினைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வட மாகாணத்தின் பல பாடசாலை களிலும் கல்வித் திணைக்களங்களிலும் ஆசிரியராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக, பிரதிக்கல்விப்பணிப்பாளராக வலயக்கல்விப் பணிப்பாளராக கல்வித்துறையின் பல பதவிகளை வகித்துத் தற்போது வடமாகாணத் தின் யாழ்.மாவட்டத்தில் உள்ள முதன்மை வலயமான யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெறும் அவர் பல சேவைகளை இன்முகத்துடன் வழங்கியுள்ளார்.


பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்க ளினால் மிகவும் நேசிக்கப்பட்ட ஒரு நபராகவும் அமைந்துள்ளார். தேவையான சந்தர்ப்பங்களில் நல்ல ஆலோசகராகவும் செயற்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைச்சில் நான் வேலை செய்யும் போது எனக்கும் சிறந்த ஆலோசனைகள் வழங்கி வந்தவர்.

அவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைவதுடன் தனது கடமைகளை நிறைவேற்றிய மகிழ்ச்சியுடன் அவர் ஓய்வு பெறுகின்றமையானது அவருக்கு கிடைக்கும் மிகப் பெரிய புகழாரமாகும்.

**திரு. செ. பிரணவதாசன்,
கல்விப்பணிப்பாளர்,
தமிழ் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை,
இலங்கை கல்வி அமைச்சு.**

### ஸ்ரீ நாகவிகாராதிபதியின் அருளாசி



கல்விச் சமூகத்திற்கு அளப்பெரும் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்கின்ற திரு. பொன்னையா ரவிச்சந்திரன் அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசியுரை எழுதுவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன்.

ஓய்வு பெற்றுச் செல்கின்ற திரு.பொன்னையா ரவிச்சந்திரன் அவர்கள் ஓய்வு காலத்தில் நோய் நொடி இன்றி உடல், உள ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்தி பௌத்த தர்மத்தில் ஆசீர்வாதம் செய்கின்றேன்.

**வண.கலைமாமணி மீஹாஹயன்துரை
சிறிவிமலதேரர்,
ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலையம்,
யாழ்ப்பாணம்.**

### யாழ். ஆயரின் அருளாசிச் செய்தி



யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் அவர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளராக வலிகாமம், தென்மராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களிலும், வடமாகாணக் கல்வித் திணைக்களத்திலும், வலயக்கல்விப் பணிப்பாளராக துணுக்காய், தீவகம், வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களிலும் பணிபுரிந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருகின்றமை பாராட்டத்தக்கது.

இவர் கல்வித்துறைக்கு ஆற்றிய பணிகள் அனைத்திற்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்கின்றேன்.

இவருடைய அறிவும் அனுபவமும் தொடர்ந்து கல்வித்துறைக்கும் சமுதாயத்திற்கும் கிடைக்கவும் இவர் என்றும் மகிழ்வோடு வளமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ இறையாசிகளை வழங்கி நிற்கின்றேன்.

**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்,
யாழ்.மறைமாவட்ட ஆயர்.**

### மௌலவியின் அருள் ஆசிகள்




பொ.ரவிச்சந்திரன் அவர்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளராகி யாழ்ப்பாண /கல்வி வலயத்திலே கல்விப் பணிப்பாளராக தம் பணிதனை தக்க வைத்த தனயன் இன்று (22.06. 2024) மணிவிழா நாயகனாக வலம் வருவதற்காக எனது வாழ்த்தறிதலையும் ஆசியதனையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

வாழ்க வளமுடனும் நலமுடனும் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் பல்லாண்டு பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க!

இன்னும் நிகழ்காலம் ஒளிமிக்கதாகவும் எதிர்காலம் பல சிறப்புக்களுடன் மிளிர்ந்து ஆரோக்கியத்துடன் ஆயுள் நீடித்திட எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**தேசாபிமானி அல்ஹாஜ்,
மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸ்மி),
யாழ்/கிளி மாவட்ட உலமாசபை, முன்நாள் தலைவர்,
யாழ் மாவட்ட சர்வமத தலைவர்,
அகில இலங்கை சமாதான நீதவான்.**

### மக்கள் சேவையே மகேசன் சேவையாய் கருதியவர்.




மணிவிழாக் காணும் வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் நற்பண்புகள் வாய்க்கப்பெற்ற மாண்புடைய செம்மல் ஆவார்.

கல்விப்புலத்தில் அவரது பணிகள் கலங்கரைவிளக்காய் நின்றுலாவும் என்பது திண்ணமாகும். அமைதியும், ஆளுமைப் பண்புகளும், இன்மொழி பேசலும், இனிதே நோக்கலும், வன்மமற்ற உயர்ந்த உள்ளமும் அவனியில் அவரை அண்ணாந்து பார்க்க வைத்தது.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" எனக் கொண்டு கருமமாற்றிய இவர் கறைபடியாத கரங்களுக்குச் சொந்தக்காரன். இறை நம்பிக்கையாளன்.

கருமமே கண்ணாகக் கொண்டவர். அவர் பணி ஓய்வு பெறும் இவ்வேளையில் இவரது எதிர்கால வாழ்வு சிறக்கவும், சுபீட்சம் காணவும் சோமாஸ்கந்தப் பெருமானின் அருளாசிகளை வேண்டி வாழ்த்தி நிற்கிறேன்.

**திரு.சி.திரிகரன்,
தலைவர், மணிவிழாக்குழு,
அதிபர், யா/ஸ்ரீ.சோமஸ்கந்தா கல்லூரி,
புத்தூர்.**



## திரு. பொன்னையா ர

**(வலயக்கல்விப் பணிப்பா**

**மணிவிழா நாயகனின் வ**

**மணிவிழா நாள் 2**

1. பிறந்த திகதி : 19.06.1964
2. தந்தையின் முழுப்பெயர் : திரு. வே
3. தாயார் பெயர் : திருமதி. பொன்னை
4. துணைவியார் பெயர் : திருமதி. சா
5. மகள் பெயர் : செல்வி. அபிநயா ர
6. ஆரம்பக் கல்வி (தரம் : 01-03) : யா/வட் வித்தியாலயம். (தரம் : 04-05) : தி/புன
7. இடைநிலைக் கல்வி (தரம் : 06-13)
8. தகைமை : B.Com.யாழ்ப்பாணப் ப
   Diploma in Education
   M.Ed - யாழ்ப்பாணப் ப
9. ஆசிரிய சேவை : யா/அராலி சரஸ்
   (17.08.1988)
   யா/சுழிபுரம் ஐக்கிய சங்க
   யா/வட்டு.திருநாவுக்கரசு வி
   யா/வட்டு. இந்துக் கல்லூரி.
10. கல்வி நிர்வாக சேவை :
    1. பிரதிக்கல்விப் பணிப்பாளர்
       வலிகாமம் கல்வி வலயம் (1
    2. பிரதிக்கல்விப் பணிப்பாளர்
       தென்மராட்சி கல்வி வலயம்.
    3. பிரதிக்கல்வி பணிப்பாளர் (
       வலிகாமம் கல்வி வலயம். (
    4. பிரதிக்கல்விப் பணிப்பாளர்
       வடமாகாணக் கல்வித் திணை
    5. வலயக் கல்விப்பணிப்பாளர்,
    6. பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
       யாழ்ப்பாணம் கல்வி வலயம்
    7. வலயக் கல்விப் பணிப்பாளர்
    8. வலயக் கல்விப்பணிபாளர்,
    9. வலயக்கல்விப் பணிப்பாளர், யா

## நாயகனின் ப

**இடம்: துர்க்கா மணிமண்டபம்,, நல்**

**காலம்: 22.06.2024 சனிக்கிழமை,**

அனைவரையும் அன்புடன்


**வாழ்த்துவோர்–மண**

**யாழ்ப்பாண கல்வி வல**

(சி-618)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளர் உயர்திரு.பொன்னையா ரவிச்சந்திரன் சிறப்பு மலர் -19.06.2024



## னயா ரவிச்சந்திரன்

பணிப்பாளர்,யாழ்ப்பாணம்.)
ாயகனின் வரலாற்றுச் சுவடு
ழா நாள் 22.06.2024

964
: திரு. வேலுப்பிள்ளை பொன்னையா
தி. பொன்னையா சற்குணவதியம்மா
திருமதி. சங்கமித்திரா ரவிச்சந்திரன்
அபிநயா ரவிச்சந்திரன்
03) : யா/வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம்
-05) : தி/புனித சவேரியார் வித்தியாலயம்
ம் : 06-13) யா/வட்டு இந்துக் கல்லூரி
ழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Education - தேசிய கல்வி நிறுவகம்
ப்பாணப் பல்கலைக்கழகம்
ராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்

க்கிய சங்க சைவ வித்தியாலயம்.
வுக்கரசு வித்தியாலயம்.
க் கல்லூரி.

ணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்)
வலயம் (12.03.2007)
ணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)
வி வலயம். (2008)
ரிப்பாளர் (கல்வி பொது நிர்வாகம் தாபனம்)
வலயம். (2012)
ணிப்பாளர் (பொது நிர்வாகம்)
ல்வித் திணைக்கம். (2016)
ணிப்பாளர், துணுகக்காய்கல்வி வலயம் (2016)
ணிப்பாளர், (பொது நிர்வாகம் தாபனம்)
வி வலயம்.(2019)
பணிப்பாளர், தீவக கல்வி வலயம் (2019)
ணிபாளர், வலிகாமம் கல்வி வலயம்(2021)
ிப்பாளர், யாழ்ப்பாணம் கல்வி வலயம் (2023)

## னின் மணிவிழா

டபம், நல்லூர்.
க்கிழமை, காலை 8.30 மணி

அன்புடன் அழைக்கின்றோம்.

## ளர்-மணிவிழா குழு,
## ல்வி வலய அதிபர்கள்.



### பல்துறையிலும் சிறந்து விளங்கியவர்...

மணிவிழா நாயகன் பொ.ரவிச்சந்திரன் ஆரம்ப காலங்களில் ஆசிரியராக தனது ஆரம்பப் பணியை ஆரம்பித்து பின்னர் படிப்படியாக உதவிக் கல்விப் பணிப் பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து துணுக்காய், தீவகம், வலி காமம், யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களில் வலயக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வடக்கு மாகாணத்திற்கு வினைத் திறன்மிக்க கல்விச்சேவையினை வழங்கியுள்ளார்.

ஆசிரியத்துறையில் மட்டுமன்றி, கலைத்துறையில் சிறந்த நாடக நடிகனாகவும், எழுத்தாற்றல், பேச்சாற்றல் மிக்கவராகவும் திகழ்ந்ததுடன் பல்பரிமாண ஆளுமைமிக்க ஒரு கல்வி நிர்வாக சேவையாளராகத் திகழ்ந்தார்.

அத்துடன் தனது சேவைக்காலத்தில் பாடசாலை வகுப்பறைக் கற்பித்தலில் அதிபர், ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களைக் கற்பிக்க வழிகோலியுள்ளார்.நல்லிணக்க உறவுக்கு அத்திவாரமான பெற்றோர்.மாணவர் சந்திப்புக்களில் நம்பிக்கை கொண்டு, பாடசாலைகள் தோறும் சென்று வாசிப்பின் பயன்கள், வீடுகளில் உயிரோட்டமுள்ள கற்றலுக்கான சூழல், மகிழ்ச்சியான இல்லம், அறநெறிப்பண்புகளுடன் கூடிய சீரிய வாழ்வு, உண்மை, நேர்மை, விடாமுயற்சி, கடின உழைப்பு போன்ற அடிப்படை வாழ்வியல் தத்துவங்களை எடுத்துரைக்கும் கூட்டங்களை நடாத்தி அவற்றினை ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள் கைக் கொண்டு வாழ விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற் கொண்டார்கள்.திரு.பொன்னையா ரவிச்சந்திரன் அவர்களின் ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**திரு.இ.இளங்கோவன்,**
**பிரதம செயலாளர்,**
**பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாணம்.**



### உன்னத சேவையால் உயர்ந்தவர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ அடித் தளமாக அமைகின்ற கல்வித் துறையில் பல்வேறு பதவிகளை அலங்கரித்த திரு.பொன்னையா ரவிச்சந்திரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்வடைகின்றேன்."அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல் பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல் அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்ற புரட்சிக்கவி பாரதியாரின் உணர்ச்சிக் கவிதைக்கமைய ஆசிரியத் தொழிலில் தடம் பதித்த இவர் தனது தன்னலமற்ற உன்னதமான சேவையால் பல நல் மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கல்விப்புலம் சார்ந்த அளப்பரிய சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்த திரு.பொன்னையா ரவிச்சந்திரன் அவர்கள் தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்து ஓய்வுக் காலத்திலும் தனது கல்வி, சமூகப் பணிகளை தொடர எல்லாம் வல்ல இறைவனின் அருளாசியை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. ம.பிரதீபன்,**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர் (பதில்),**
**யாழ்ப்பாண மாவட்டம்.**



### பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.


பல்லாண்டு காலம் பணியாற்றி மூப்பு பெறுகையில் முதன்மை வலயமாம் யாழ். வலயத்தின் பணிப்பாளராகி சேவையின் முதிர்ச்சியை வடமாகாணம் எல்லாம் வழங்கி தனது ஓய்வை அர்த்தமுள்ளதாய் ஆக்கும் எமது வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. பொன்னையா ரவிச்சந்திரன் அவர்களின் ஓய்வுக்காலம் அமைதியானதாகவும் ஆரோக்கியமானதாகவும் அமையவும் அவர் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

நேர்மையுடன் பணியாற்றும் நிதானமான அமைதியான மனிதராக நான் அவரைக் காண்கின்றேன். தனது கடமைகளை தானே நிறைவேற்றும் பொறுப்புள்ள அதிகாரியாக ஏனையோரின் தவறுகளைக் கடிந்து கொள்ளாது ஒவ்வொரு முறையும் தவறுகளைத் திருத்தும் மிக பொறுமையான நல் ஆசானாக அவரை நாம் கண்டோம்.

அவரின் ஆலோசனைகள் எமை எப்போதும் நல்வழிப்படுத்தி உற்சாகமூட்டும்.

அவரின் அனுபவங்கள் என்றென்றும் வடமாகாணத்தில் பயன்படட்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு.க.சுவீதன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**(தாபன மற்றும் பொதுமுகாமைத்துவம்)**
**யாழ்ப்பாணக் கல்வி வலயம்.**



### கல்விப் புலத்தின் சிறந்த சேவையாளன்

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.பொன்னையா ரவிச்சந்திரன் அவர்களின் சேவையினை பாராட்டுவ துடன் மணிவிழாவினை முன்னிட்டு வெளியிடப் படவுள்ள "மணி விழா" மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தான் கடமையாற்றிய அலுவலகங்களிலே சிறந்த நிர்வாகியாகவும் சிறந்த தலைவராகவும் தனது சிறப்பான சேவையினை வழங்கியுள்ளார். கல்வியறிவுடன் சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே மனிதனை உயர்த்தும் ஒரு வழி எனக் குறிப்பிடப்படுகின்றது. தனிமனித வாழ்வை இன்பமுடைய தாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதுமே கல்வி.

இத்தகைய கல்வியினை தனது தலை மைத்துவத்தின் கீழ் சிறந்த முறையில் வழங்கி, மாணவர்களின் வாழ்விற்கு ஒளியூட்டி, கல்வியுலகில் அவர்கள் சிறந்து விளங்க பெரும் பொறுப்புடன் பணியாற்றியுள்ளார்.

இவரது அளப்பரிய சேவையினை பாராட்டுவதுடன் தனது ஓய்வுகாலத்தில் பல சமூக, சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**திரு.ம.பற்றிக் டிறஞ்சன்,**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,வடக்கு மாகாணம்.**



### மணிவிழா வாழ்த்துச் செய்தி

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.பொன்னையா ரவிச்சந்திரன் அவர்களின் சேவைகளைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.பொன்னையா ரவிச்சந்திரன் அவர்கள் 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையாக 19 வருடங்கள் ஆசிரிய சேவையிலும் கல்வி நிர்வாக சேவையில் 17 வருடங்களுமாக 36 ஆண்டுகள் கல்வித்துறையில் அரும்பணியாற்றியுள்ளார்.

சிறந்த ஆளுமையுடைய ஆசிரியராகவும் கல்வி நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றிய இவரது சேவையினையும் ஆற்றலினையும் பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வுக் காலத்தில் நோய் நொடியின்றி நீண்ட காலம் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ இறைவனை வேண்டுவதுடன், மேலும் இவரது கல்விப் பணி தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.ஜோன் குயின்ரஸ்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக்கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்.**



### மாணாக்கர் வாழ்விற்காய் தன்னைத் தியாகித்தவர்

மணிவிழா நாயகன் பொ.ரவிச்சந்திரன் அவர்கள் கல்விப் பணிப்பாளரான காலங்களில் எதிர்காலச் சந்ததியினைச் செதுக்கும் சிற்பியாகத் திகழ்ந்தவர். அதிகாலை வேளையில் 3 மணிக்கு எழுந்து, இரண்டு மணித்தியாலங்கள் ஆன்மீகம், அறிவியல், இலக்கியம், கலை உட்பட பல்துறை சார்ந்த நூல்களையும் வாசித்து அவைகூறும் வழியில் தனது வாழ்வை அமைத்துக் கொண்டவர்.

தான் கற்ற விடயங்களை தனது சேவை நேரங்களில் அதிபர், ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களுக்கு வகுப்பறைகளில் கற்பிக்க வைத்தவர். பெற்றோர், மாணவர் சந்திப்புக்களில் மிகுந்த நம்பிக்கைகொண்டு, பாடசாலைதோறும் சென்று, வாசிப்பின் பயன்கள், வீடுகளில் உயிரோட்டமுள்ள கல்விச் சூழல், மகிழ்ச்சியான இல்லம், நேர்மையானதும் அறநெறி விழுமியப் பண்புகளுடன் கூடியதுமான வாழ்வு, விடாமுயற்சி, கடின உழைப்பு, வினைத்திறன் மற்றும் விளைதிறன் கொண்ட நற்பிரஜைகளை நாட்டில் உருவாக்குதல் போன்றவற்றை பெற்றோர், மாணவர் சந்திப்பில் ஆணித்தரமாக எடுத்துரைப்பவர்.

இம்மணிவிழா நாளில், இன்றுபோல் என்றும் நோய்நொடியின்றி எல்லா நலன்களும் பெற்று நூறாண்டு காலம் குடும்பத்தாருடன் இன்புற்று வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. நா.சிவநேசன்,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**கோப்பாய், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையி(இ)லைக்குள் அழையாத விருந்தாளி

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

புகையிலை விவசாயம் செய்பவருக்கு நல்லதொரு பணப்பயிர். போர்த்துக்கேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட இலைப்பயிர். பின்னாளில் அமெரிக்க பிரித்தானிய புகையிலைக் கம்பனிகளினால் மேன்மைப்படுத்தப்பட்ட பயிராகவும் இது இருக்கின்றது. 2020 இல் பெறப்பட்ட தகவலின்படி புகையிலை 1142 ஹெக்டேயரில் அதாவது நாட்டினது 0.04 சதவீத விவசாய நிலத்தில் பயிரிடப்படுவதாகவும் 9220 மெற்றிக் தொன் உற்பத்தி செய் யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந் நிலையில் 2017 ஆம் ஆண்டு அரசு தீர்க்கமான முடிவெடுத்து 2020 இல் புகையிலை செய்கையை தடை செய்ய இருந்தது. ஆனால் புகையிலை செய்கைக்கான மானியங்கள் எதுவும் வழங்கப்பட வில்லையே தவிர அதன் பயிர்ச்செய்கை தடை செய்யப்படவில்லை.

அரசமட்டத்தில் இதனை ஆதரிக்காவிட்டாலும் விவசாயிகள் விரும்பி வளர்க்கும் பயிராக புகையி(இ)லை இருப்பதற்குக் காரணம் ஓரளவிற்கு வரட்சியை தாங்கும் வல்லமையும் இலகுவாக பராமரிப்பதும் சந்தைவாய்ப்பு அதிகமுள்ளதும் ஆதாயம் அதிகம் கிடைக்கும் என்பனவாகும்.

புகையிலையில் வரும் நோய்கள் மற்றும் நெமற்றோட்டுக்களின் தாக்கம் தவிர்ந்து இதனை எம்மவர்கள் சுதேச தொழிலநுட்பத்தை உட்புகுத்தி கோடா என்னும் பதப்படுத்தும் திரவத்தை தயாரித்து அதில் புகையிலை இலையை தோய்த்தெடுத்து எமக்கேயான லேபலுடன் விற் கின்றனர். நல்லதோ, கெட்டதோ புகையிலை எம்மவர்களின் வாழ்வாதாரப் பயிர் என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை.

புகையிலையை மெல்லுவதனால் வாய்க்குழிக்குள் வைத்து நாள் முழுக்க குதப்புவதனால் சுருட்டாக புகைப்பதனால் வரும் தீங்குகள் பல உண்டு. பலருக்கு வாய்ப்புற்று மற்றும் நுரை யீரல் புற்றுநோய்க்கான காரணியாகவும் இது இருக்கின்றது. பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்புடன் புகையிலை யும் வைத்து வாய் சிவக்க குதப்புபவர்களையும் அதனை கண்ட இடத்தில் துப்புவதனையும் நாம் பார்த்து அருவருத்தும் இருக்கின் றோம். இதனால் இந்த பயிருக்கு மாற்றீடாக பல பயிர்களை பரிந்துரைத்தும் எதுவும் விவசாயிகளின் விருப்புக் பயிராக அல்லது அதீதலாபம் தரும் பயிராக இல்லை என்பதனையும் இங்கே பதிவிட வேண்டும்.

விவசாய பெருமக்களுக்கு பயிரழிவுகள் ஏற்பட்டு நட்டம் ஏற்படும் போதெல்லாம் புகையிலையை நட்டவர் நாலு இலைக்குள் பயிர் உற்பத்திச் செலவை அடக்கிவிட மீதியிலையெல்லாம் ஆதாயந் தரும் பொருளாகி விடுகின்றது. இதிலுள்ள வேதியியல் நஞ்சுப் பொருளான நிக்கொட்டின் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்தும் பீடைநாசினியாக பயன்படுத்தப்ப டுகின்றது. புகையிலைப் பயிருக்குள்ளும் பீடை நோய்த் தாக்கங்கள் அதிகம். அவற்றிலிருந்து மீண்டுவரும் போது அதாவது அறுவடை செய்து உலர்த்தும் போது தான் இந்த விரும்பியழைக்காத விருந்தாளி வந்து சேர்ந்து விடுகின்றது.


சாதாரணமாக புகையிலையை அறுவடை செய்த பின் நம்மவர்கள் ஐந்தாறு இலைகளை காம்புடன் வெட்டி கத்தைகளாக கட்டி அவற்றை சீமெந்து சுவர் களில் மேல் இரு புறமும் வைத்து காயவிடுவர். இது ஆண்டாண்டுகாலமாக எம்மவர்கள் கடைப்பிடிக்கும் நடைமுறையாகும். வரண்ட வலயத்து மக்கள் நாமென்பதால் அறுவடை செய்து மதில்களில் தொங் கும் புகையிலைக்கத்தைகள் அதீத வெப் பத்தில் காய்ந்து மேலதிக பதனிடலுக்கு தயாராகிவிடும். ஆனால் தற்போது வரண்டகாலம் மாறி கால நிலைமாற்றத்தால் அவ்வப் போது மழையும் பெய்வதனால் இவ்வாறு காயவைத்திருக்கும் புகையிலை கத்தைகள் மழையில் நனைந்தும் வெய்யிலில் காய்ந்தும் இருப்பதனைக்காண முடிகின்றது. மழை அதிக மாயி ருக்கும் போது ஈரப்பதன் அதிக மாகி பாதி காய்ந்திருக்கும் புகையிலை கத்தைகளில் ஒரு வகை பூஞ்சணம் வளர்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

வளரும் வெள்ளைநிறப் பூஞ்சணம் அஸ்பேஜிலசு பிளேவசு எனப்படும் நச்சுப் பூஞ்சணமாகும். இது வழமையாக ஈரப்பதன் கூடிய பதார்த்தங்களில் உடனடியாக தொற்று தலை ஏற்படுத்தும் விரைந்து வளரும் விரும்பத்தகாத பூஞ்சணமாகும். பூஞ்சணம் உட் பக்கத்து புகையி(இ)லையில் பரந்துபட்டு வளர்ந் திருப் பதை அவதானிக்க முடிந்தது. இந்த பூஞ்சணம் விரைந்து மென் பச்சை தொடங்கி கறுப்பு நிற வித்திகளை அதிகளவில் உருவாக்கியிருந்ததையும் அந்த வித்திகள் வளியில் பரவக்கூ டியதாக இருப்பதனையும் காணலாம்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

பூஞ்சணம் வளர்ந்திருப்பதனை உட்பக்க இலைகளை மறுபுறம் திருப்பி அவதானித்தால் கண்டுகொள்ள முடியும். இல்லாது விழல் கைவில்லையின் உதவியுடனும் அவதானிக்க முடியும். சராசரியாக அதிகமான வெப்பநிலையான 37 பாகை செல்சியசில் இப் பூஞ்சணம் இலகுவாக வளர்ந்து விடும். ஆனாலும் 25 இலிருந்து 40 பாகை செல்சியஸ் வெப்ப நிலைக்குள் இப் பூஞ்சணத்தின் வளர்ச்சி காணப்படுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. அதாவது வரண்ட வலயத்தில் இவ் வகையான வெப்பநிலை தொடர்ந்திருப்பதனால் இவ்வகை பூஞ்சணங்களின் தொற்றினையும் அதனது பெருக்கத்தையும் கட்டுப்படுத்துவது சிரமமாக இருக்கும். விவசாயப் பெருமக்களுக்கு தெரிந்திருக்காத, கண்ணுக்கு தெரியாத இவ்வகைப் பூஞ்சணம் பூஞ்சண நஞ்சு (mycotoxin) என்னும் வேதியியல் பதார்த்தத்தை வெளிவிடுகின்றது. இது பூஞ்சணத்தில் உருவாக்கப்படும் நச்சுப்பதார்த்த மாகும்.



ஆக மொத்தத்தில் புகை (இ)லையை விருப்பப்பட்டு உண்பவர்களுக்கு இப் பூஞ்சணத்தால் பாதிப்பு அதிகமாகவே இருக்கும். விரும்பியுண்ணும் புகையிலையுடன் விரும்பியோ விரும்பாமலோ நஞ்சை உண்ணுபவர்களாக வினையைத் தேடுபவர்களாகநாம் மாறி விடக்கூடாதல்லவா.

அவசியமான உணவாக இல்லாதபட்சத்தில் புகையிலையை நாம் உள்ளெடுப்பது தவிர்க்கப்படக் கூடியதல்லவா.

நாமும் நன்றாக யோசித்து மற்றையவர்களையும் அவசியம் யோசிக்கவைப்போம். புகையிலையை தவிர்ப்பது எமது சுகவாழ்வுக்கு உரமூட்டும். குடும்ப சுகாதாரத்தை [illegible]

---

# இன்று ஒரு தகவல் 157



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## அன்பும் அறிவும்

ஒரு அம்மாவிற்கு அவரின் கணவர் மேல் அளவு கடந்த அன்பு. அந்த அன்பை அவர் காட்டுகிற விதம் எப்படித் தெரியுமா? தேநீர் போடும் போது சர்க்கரையை கை நிறைய அள்ளி அதிலே கொட்டிக் கொடுப்பார். அந்த அப்பாவி மனிதனும் அதை மிகவும் விருப்பமாகச் சாப்பிடுவார். வெளியிலேயும் அதை மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுவார். என் மனைவிக்கு வரவர என் மேலே அன்பு அதிகமாகிக் கொண்டே வருகிறது என்பார். எப்படி சொல்லுகிறீர்கள் என்று கேட்டால்?

முன்பு எல்லாம் இரண்டு கைப்பிடி சர்க்கரை தேநீரிலே போடுவார். இப்போது எல்லாம் மூன்று கைப்பிடி அளவுக்குப் போடுகிறார். அப்படி என்றால் அன்பு வரவர அதிகமாகிக் கொண்டே வருகிறது என்று தானே அர்த்தம்? என்பார். அந்த அம்மாவிடம் அன்பு அதிகமாக இருக்கிறது உண்மையோ!இல்லையோ? இவரிடம் அறிவு குறைவு என்பது உண்மை! அதிலே சந்தேகமே வேண்டியதில்லை.

அன்பு மட்டும் ஒருத்தரிடம் இருந்தாலும் பிரயோஜனம் இல்லை! அறிவு மட்டும் ஒருத்தரிடம் இருந்தாலும் பிரயோஜனம் இல்லை! மகிழ்ச்சியான வாழ்வுக்கு மிகவும் முக்கியமாக தேவைப்படுவது இரண்டு. ஒன்று அன்பு. இன்னொன்று அறிவு. இந்த இரண்டிலும் ஒன்று இல்லை என்றால் கூட மகிழ்ச்சி போய்விடும் என்கிறார். தத்துவ மேதை பெட்ரண்டரஸ்ஸல். அதை விளக்குவதற்கு அவர் மிகப்பெரிய உதாரணம் எல்லாம் கொடுக்கிறார்.

இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்தது அல்லவா அந்த சமயத்திலே பல நாடுகளிலே ஏராளமான இராணுவ தளபாடங்கள் எல்லாம் தயார் செய்தார்கள். வெடி மருந்து தொழிற்சாலைகள் எல்லாம் உருவாக்கினார்கள் நவீனமான போர்க்கருவிகள் எல்லாம் தயார் செய்தார்கள் இதற்கெல்லாம் எது காரணம்? அறிவு தான்

அவர்களிடம் இருந்த தொழில்நுட்ப அறிவு தான் இவ்வளவும் தயார் செய்வதற்குக் காரணம். இருந்தும் இதெல்லாம் எதற்கு உபயோகிக்கப்பட்டது? உலகத்திற்கு கெடுதல் செய்வதற்குத்தான் உபயோகிக்கப்பட்டது. யுத்தத்தை ஆரம்பித்த ஜேர்மானியர்களும் சரி மற்ற நாட்டுக்காரர்களும் சரி தாங்கமுடியாத கஷ்டங்களை அனுபவித்தார்கள்.

இதற்கு என்ன காரணம்! அன்பு இல்லாமல் போனது தான் காரணம்! அறிவு ஆயுதங்களைத் தயார் செய்தது அன்பு இல்லாததுனாலே அது அவர்களுக்கே இடைஞ்சலாக போய்விட்டது. அன்பு சேராத வெறும் அறிவு மட்டும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியலையே! அதே மாதிரித் தான் அறிவு சேராத அன்பினாலேயும் ஆபத்தை உண்டாக்கி விடும். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலே இந்தியாவிலேயும் பக்கத்து நாடுகளிலேயும் ஒரு பயங்கரமான நோய் பரவிவிட்டது. பிளேக் என்கிற தொற்றுநோய் தான் அது! அது அதிகமாக பரவியதற்கு காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்? அன்பு தான் அதற்குக் காரணம். எப்படித் தெரியமா? அன்பு காரணமாக உறவினர்களும் நண்பர்களும் நோயாளிகளைத் கட்டித் தழுவி தங்களுடைய அன்பைத் தெரிவித்துக் கொண்டார்களாம். இது நோய் வேகமாக பரவுதற்கு சாதகமாகப்போய் விட்டது. அறிவு சேராத அன்பினாலே இந்த நிலைமை.ஆகக்கூடியது நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்அறிவு இல்லாத அன்பும் ஆபத்து. அன்பு இல்லாத அறிவும் ஆபத்து.

நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால் இது இரண்டும் கலந்து இருக்க வேண்டியது அவசியம்.


ஒரு குடும்பத்திலே மனைவிக்கு உடம்பு சரியில்லை! கணவன் காலையிலே எழுந்து தேநீர் போட்டார். தேநீர் போடுவது இது தான் அவருக்கு முதல் அனுபவம். என்னென்னத்தையோ எடுத்து ஒன்றாகக் கலந்தார். தேநீர் மாதிரி ஒரு திரவத்தை தயார் செய்தார். மிகவும் பவ்யமாக மனைவியிடம் கொண்டு போய்க் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். நீங்கள் சாப்பிடுங்கள் என்றார்.எனக்கு வேண்டாம் நீங்கள் சாப்பிடுங்க என்றார் இவர்.அந்த அளவுக்கு என்மேல் அன்பு வைத்திருக்கிறீர்களே என்றார். அவர் நிமிர்ந்து அந்த அம்மாவைப் பார்த்தார்.

என்னிடம் அன்பு இருக்கு அதனாலே தான் உன்னைச் சாப்பிடச் சொன்னேன். அதே நேரத்திலே எனக்கும் அறிவு இருக்கு அதனாலே தான் சாப்பிடமாட்டேன் என்கிறேன். ஏன் என்றால் நான் தயார் செய்த தேநீர் என்று விளக்கம் கொடுத்தார் அந்த ஆள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமடைந்த இறங்குதுறைகளை புனரமைத்து தாருங்கள்

## கடற்றொழிலாளர்கள் கோரிக்கை



(கண்டாவளை)

**கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் இறங்குதுறைகள் இன்மையால் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் கடற்றொழில் பிரதேசமான பூநகரி பிரதேசத்தில் 17 கடற்றொழில் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இதில் கிட்டத்தட்ட நான்காயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறனர். இந்த நிலையில் இரணை மாதா நகர் மற்றும் முழங்காவில் பள்ளிக்குடா, நாச்சிகுடா, கௌதாரி முனை போன்ற இடங்களில் உள்ள இறங்கு துறைகள் சேதமடைந்தும் ஆழமற்றும் காணப்படுவதனால் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் சென்று வருவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-315)

# தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் ஒன்றிணைந்து செயற்படுவோம்

## சிவசக்தி ஆனந்தன் அழைப்பு

(நெளுக்குளம்)

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ் பொது வேட்பாளர் என்னும் எண்ணகரு மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந் துவரும் நிலையில் அதனைக் குழப்புவதற்கு தென்னில ங்கை அரசியல் சக்திகளுடன் எமது மக்கள் தலை வர்களும் கரம்கோர்த்திருப்பது வேதனையளிக்கிறது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்ன ணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரி வித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியின் 34 ஆவது தியாகிகள் தினத்தை முன்னிட்டு நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இன்று அமெரிக்கா, ஐரோ ப்பிய ஒன்றியம், கனடா, பிரித்தானியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் இலங்கையின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கும் தென்பகுதி ஜனாதிபதி வேட்பாளர்கள் நாட்கணக்கில் வடக்கில் தங்கியிருந்து தமது பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கும் தமிழ் பொதுவேட்பாளர் எண்ணக் கருவும் ஒரு காரணம் என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ள நிலையில் அதனை வலுப்படுத்துவதற்கு அனை த்து அரசியல் தலைமைகளும்



இதயசுத்தியுடன் ஒன்றிணைய வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றோம் என அதில் குறப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3146

சிவா




தனு




கௌசிகன்





பிருந்தா




துஷா




தர்ஷன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 511





வாழ்நாளெல்லாம் பழி பாவங்களில் முழுகிக் கிடந்தவர்கள் திடீரென்று ஒரு நாள் வைராக்கிய சீலர்களாகிறார்கள் பக்தி பரவசமடைந்து ஆடிப்பாடுகிறார்கள் இறைவன் கருணைக்குப் பாத்திரமாகிறார்கள் மனித சமூகத்துக்கு ஒப்பற்ற தொண்டுகளும் புரிகிறார்கள்.

இதற்கு மாறாக, நெடுங்காலமாய்த் தூய்மையான களங்கமற்ற வாழ்க்கை நடத்தியவர்கள் திடீரென்று ஒருநாள் வழுக்கி விழுகிறார்கள்! அப்படி விழும் போது அதல பாதாளத்திலேயே விழுந்து விடுகிறார்கள்.

பார்த்திபேந்திரனுடைய ஆவேசமொழிகளைக் கேட்டு வந்த நந்தினி, "போதும் ஐயா! போதும்! நிறுத்துங்கள்! அவ்வளவு பயங்கரமான காரியம் எதையும் செய்யும்படி தங்களை ஒருநாளும் நான் வற்புறுத்தப் போவதில்லை. தங்களுக்கும் எனக்கும் உகந்த சந்தோஷமான ஒரு காரியத்தைத்தான் சொல்லப் போகிறேன் என்றாள்.

## மூன்றாம் அத்தியாயம்

## ஆந்தையின் குரல்

நந்தினி கடலை நோக்கினாள். பழுவேட்டரையர் ஏறிச் சென்ற படகு பார்த்திபேந்திரனுடைய கப்பலை நெருங்கிக் கொண்டிருந்தது. நந்தினி பெருமூச்சு விட்டாள். அது பார்த்திபேந்திரனுடைய நெஞ்சில் புயலாக அடித்தது.

தேவி! சொல்லுங்கள். நான் செய்யவேண்டியது இன்னதென்று சொல்லுங்கள். தங்களுக்கும் எனக்கும் உகந்தது என்று பிரித்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. தங்களுக்கு எது உகந்ததோ அதுதான் எனக்கும் உகந்தது!" என்றான் பல்லவ வீரன்.

அவன் மனத்தில் விசித்திரமான எண்ணங்கள் எல்லாம் அந்நேரத்தில் உதித்தன. இந்தப் பெண் அந்தக் கொடிய கிழவனிடம் அகப்பட்டுக் கொண்டு கூண்டுக் கிளியைப் போல் தவித்துக் கொண்டிருக்கிறாள் என்பதில் சந்தேகமில்லை. அந்தக் காட்டுப் பூனையிடமிருந்து இவளை ஏன் விடுதலை செய்யக் கூடாது? இவள் மட்டும் தன் விருப்பத்தைத் தெரிவிக்கட்டும்! அவனை அக்கப்பலிலேயே சிறைப்படுத்திக் கண்காணாத தேசத்துக்குக் கொண்டு போய் விட்டு விடச் செய்யலாம்! சண்டாளன்! புதல்வியும், பேத்தியுமாக இருப்பதற்குரிய இளம் பிராயமுடைய பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள எப்படி இவன் மனந் துணிந்தது?

நந்தினி இன்னமும் படகையும், கப்பலையும் பார்த்துக் கொண்டிருந்தாள். படகிலிருந்து பழுவேட்டரையர் கப்பலில் ஏறுவதைப் பார்த்தாள்.

"நல்லவேளை! பத்திரமாக ஏறிவிட்டார்! எவ்வளவு வீரராயிருந்தாலும் வயதாகி விட்டதல்லவா? படகிலிருந்து கப்பலில் ஏறும்போது தடுமாறாமல் இருக்க வேண்டுமே என்று எனக்குக் கவலையாயிருந்தது!" என்றாள்.

பல்லவன் ஏமாற்றமடைந்தான்! 'கிழவனிடம் இவளுக்கு இவ்வளவு பரிவு ஏன்? படகிலிருந்து அவன் கடலில் விழுந்து இறந்தால் தான் என்ன? நாட்டுக்கும் நல்லது இவளுக்கும் விடுதலை! எதற்காக இவ்வளவு பரிவு காட்டுகிறாள்?

கிழவருக்குச் சோழ குலத்தாரிடம் எவ்வளவு அபிமானம் என்பது இன்றைக்குத்தான் எனக்குத் தெரிந்தது. இளவரசருக்கு ஆபத்து என்றதும் எப்படித் துடிதுடித்துப் போய் விட்டார்? ஐயா! இளவரசர் தப்பிப் பிழைத்திருக்கக்கூடும் அல்லவா? இறந்துதான் போயிருக்க வேண்டும் என்பது நிச்சயம் இல்லையே?" என்றாள் நந்தினி. (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## விதியை மாற்றி அமை!

ஒரு முறை ராஜா எதிரிகளை தாக்க ஓர் இராணுவ படை ஒன்றை தயார் செய்து போருக்கு தயாரானார். அவர் "எப்படியும் இந்த போரில் வெற்றி பெறுவோம்" என்று நம்பிக்கையுடன் இருந்தார்.

ஆனால் அந்த படையினரோ பெரும் சந்தேகத்துடனேயே இருந்தனர். அனைவரும் சோர்த்து போய் நம்பிக்கையின்றி இருந்தார்கள் இதனால் அந்த ராஜா தன் படை வீரர்களுக்கு தைரியத்தை வரவழைக்க என்ன செய்யலாம் என்று ஒரு ஜென் துறவியைப் பார்த்து கேட்கச் சென்றார்.

அப்போது அந்த துறவி ராஜாவிடம், ஒரு யோசனையைச் சொன்னார். அதே போல் ராஜாவும் செய்தார். அது என்னவென்றால்,



அந்த ராஜா போரிற்கு செல்லும் வழியில், அவர்கள் குல தெய்வ கோவிலில் நிறுத்தி பிரார்த்தனை செய்து விட்டு ஒரு நாணயத்தை எடுத்து வீரர்களின் முன் [illegible] நான் இப்போது இந்த நாணயத்தை சுழற்றி விடுவேன், தலை விழுந்தால் நாம் வெற்றி பெறுவோம் இல்லையேல் போரில் தோற்போம் என்று துறவி சொன்னதைச் [illegible]

வீரர்களிடம் நம் தலைவிதியை இந்த நாணயம் நிர்ணயிக்கட்டும் என்று கூறி நாணயத்தை சுழற்றினார். அனைவரும் அதை கூர்ந்து கவனித்தனர்.

அப்போது தலை விழுந்தது. அதனால் அந்த வீரர்கள் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கையுடனும் சந்தோசத்துடனும் எதிரிகளை தாக்க தயாரானார்கள்.

யுத்தத்தில் வெற்றியும் பெற்றனர். யுத்தத்திற்கு பின்னர், துணை மந்திரி "விதியை யாராலும் மாற்ற முடியாது." என்று ராஜாவிடம் சொல்ல "ஆம், என்று ராஜா சொல்லி அந்த நாணயத்தின் இரு பக்கத்திலும் தலை இருப்பதை" காண்பித்தார்.

நம்பிக்கையுடன் செயற்பட்டால் எத்தகைய காரியத்தையும் எளிதில் வெல்லலாம், விதியையும் மாற்றி அமைக்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலில் தூசியைக் கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகின்றோம்.
– பிஷப் பார்க்லி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியப் பிரதமர் மோடியை உடனடியாகச் சந்தியுங்கள்

மூன்றாவது தடவையாக இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்ற நரேந்திர மோடி அவர்கள் விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் அமையலாமென அறிய முடிகிறது.

எனவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக, தமிழ் அரசியல் தரப்புகள் சந்தித்தாக வேண்டும்.

அதிலும் அனைத்துத் தமிழ் அரசியல் தரப்புகளும் ஒன்றுபட்டு ஒவ்வொரு பிரதிநிதிகளை நியமனம் செய்து, அவர்களை உள்ளடக்கிய குழுவாகப் பிரதமர் மோடியைச் சந்திப்பது மிகவும் அவசியமானது.

காரணம் ஏற்கெனவே இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், தமிழ் அரசியல் தரப்புகளைச் சந்தித்தபோது; ஒற்றுமைப்படுங்கள் எனத் தமிழ் அரசியல் தரப்புகளுக்கு ஆலோசனை கூறியிருந்தார்.

இதேபோல, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அவர்களும் தமிழ் அரசியல் தரப்பைச் சந்தித்தபோது; உங்களின் ஒற்றுமை மிகவும் அவசியம் எனக் கூறியிருந்தார்.

ஆக, தமிழ் அரசியல் தரப்புகள் ஆளுக்கு ஆள் பிரிந்து நிற்பதை இந்தியா ஒருபோதும் விரும்பமாட்டாது.

தவிர, ஒட்டுமொத்த தமிழ் அரசியல் தரப்புகளும் ஒன்றுபட்டு எங்களுக்கு இதுதான் தீர்வு. இந்தத் தீர்வை பெற்றுத் தாருங்கள் எனப் பிரதமர் மோடியிடம் கேட்டாக வேண்டும்.

அப்போதுதான் அது குறித்து பிரதமர் மோடியும் இந்திய மத்திய அரசும் கருசனை கொள்ளும்.

இதைவிடுத்து தனித்து ஒரு அரசியல் கட்சியாகப் பிரதமர் மோடியைச் சந்திப்பது எந்தப் பயனையும் தரமாட்டாதென்பது நிறுதிட்டமான உண்மை.

இஃது ஒருபுறமிருக்க, இந்தியாவுக்கு வாருங்கள் கதைப்போம் என தமிழ் அரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் மோடி ஏலவே கூறியிருந்தார்.

இருந்தும் அவர் கூறியதன்படி தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் பிரதமர் மோடியைச் சந்திக்கவில்லை.

இதற்கான காரணத்தை அறிய முற்பட்டபோது, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கக்கூடிய ஒரு சிலர், பாரதிய ஜனதாக் கட்சி இந்துத்துவ சார்புடையதெனக்கூறி சந்திப்பைத் தவிர்க்க முற்பட்டதாக அறியக் கிடக்கிறது.

இங்குதான் ஒரு விடயத்தை சகலரும் அறிந்து கொள்ள வேண்டும். அதாவது ஈழத் தமிழ் மக்களுக்கு இப்போது தேவை இனப் பிரச்சினைக்கான தீர்வு. அந்தத் தீர்வைப் பெற்றுத்தரக்கூடிய தகைமையில் இருக்கக்கூடிய ஒரே ஒருவர் பிரதமர் மோடி மட்டுமே.

தவிர, கடந்த சில நாட்களுக்கு முன்னதாக இத்தாலிக்குச் சென்ற பிரதமர் மோடி புனித பாப்பரசரைச் சந்தித்தபோது இருவரும் ஆரத்தழுவிய நிகழ்வு உலகம் முழுமையினதும் கவனத்தை ஈர்த்திருந்தது.

ஆக, முதன்மையான உலகத் தலைவராக இருக்கக்கூடிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ் அரசியல் தரப்புகள் உடனடியாகச் சந்தித்து எமக்கான தீர்வை அவருடாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். சந்திப்பதை தவறவிட்டால், அவ்வளவுதான்.

# உரிய தீர்வு வழங்காவிட்டால் 24ஆம் திகதி முதல் வேலை நிறுத்தம்

## கிராம உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை

எதிர்வரும் 24 ஆம் திகதி தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என கிராம உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயத்தை இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க அறிவித்துள்ளார்.

அத்தோடு, எதிர்வரும் 24 ஆம் திகதி தங்களது பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தற்பொழுது சட்டப்படி வேலை என்ற தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவு போன்றவற்றை மறுசீரமைத்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை கிராம உத்தியோகத்தர்கள் முன்வைத்துள்ளனர்.

இதனடிப்படையில், நபர் ஒருவரின் மரணத்தின் போது வழங்கப்படும் ஆவணங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், கிராம சேவை சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் நந்தன ரணசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(ம-7,10)

# சொத்துவரியில் ஒரு வீட்டுக்கு மாத்திரமே வரி விலக்கு

## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த ஆண்டு அறிமுகமாகவுள்ள சொத்துவரியில், ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வைத்திருப்போரில் ஒரு வீட்டுக்கு மாத்திரமே வரிவிலக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முற்பகல் ஆற்றிய விசேட உரையில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சொத்துக்கள் மீதான வரி அமுலாக்கப்படும்போது ஒரு நபர் பல வீடுகளைக் கொண்டிருந்தால் அவற்றில் ஒரு வீட்டுக்கு மாத்திரமே வரிவிலக்கு வழங்கப்படும்.

இதன்மூலம் 90 சதவீத மானவர்களுக்கு வரி அமுலாக்கப்படாது.

எனவே இது தொடர்பாக நாட்டின் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7,10)

# மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம்

## ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி வழக்கு பரிசீலனை

மன்னார் - விடத்தல் தீவில் அதானி நிறுவனம் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி பரிசீலிப்பதற்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

விஜித் மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் குமுதினி விக்ரமசிங்க ஆகிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய குழாமினால் நேற்று இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வனஜீவராசிகள் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு சங்கம் உட்பட பல தரப்பினரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மத்திய ஆசிய வான்பரப்பில் தெற்கு பயணப்பாதையில் வருடாந்தம் 15 மில்லியன் பறவைகள் சஞ்சரிக்கும் முக்கிய கேந்திரப் பகுதியாக இலங்கை காணப்படுவதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கு பருவகாலத்தில் சுமார் ஒரு மில்லியன் பறவைகள் வருவதாகவும், இந்த பாதையில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், பறவைகளின் நடமாட்டத்தில் குறிப்பிடத்தக்க இடையூறு ஏற்படும் எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காற்றாலை திட்டத்திற்கு அரசியல் மற்றும் வெளிப்புற காரணிகளின் அடிப்படையில் மன்னார் தீவு தெரிவு செய்யபபட்டதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த தீவை தெரிவு செய்வதற்கு விஞ்ஞான ரீதியான அல்லது வேறு விசேட காரணம் எதுவும் இல்லை எனவும், குறித்த நிலப்பரப்பு மிகவும் உணர்திறன் மிக்க சுற்றுச்சூழல் பிரதேசம் எனவும் மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய விசாரணையின் போது இந்திய அதானி நிறுவனம் சார்பில் ஜனாதிபதிச் சட்டத்தரணி கலாநிதி றொமேஷ் டி சில்வா ஆஜரானதுடன் மனுதாரர்கள் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன ஆஜரானார். சட்டமா அதிபர் சார்பில் கலாநிதி அவந்திபெரேரா முன்னிலையாகியிருந்தார். (ம-7,10)

# 10 இலட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிப்பு

## எஸ்.எம்.மரிக்கார் எம்.பி கவலை

10 இலட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, அரச வருமானத்தை அதிகரிப்பதற்காகவே வாடகை வருமான வரி அறிவிடப்படுவதாக ஜனாதிபதி கூறுகின்றார். உள்நாட்டு தேசிய உற்பத்தி ஊடாக வருமானத்தினை அதிகரிப்பதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மக்கள் மீது வரி சுமைகளை அதிகரிப்பதன் மூலம் மேலும் நெருக்கடி நிலை ஏற்படும். இந்த நாட்டின் தனியார் துறை பணியாளர்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் வரி செலுத்துகின்றனர். அதேபோல் மின் கட்டணம் மற்றும் நீர்க் கட்டணம் அதிகரித்துள்ளமையினால் நாட்டு மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி இந்த நாட்டில் மேலும் ஆட்சியில் நீடிப்பதற்கு, ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சிலர் கூறுகின்றனர். நாட்டில் வரிசுமையை அதிகரிப்பதற்காகவே அவர்கள் அதனைக் கோருகின்றார்களா என்ற கேள்வியும் தற்போது எழுகின்றது இவ்வாறு மரிக்கார் தெரிவித்துள்ளார். (ம-7,10)

# தனியார் பேருந்துடன் மோ.சைக்கிள் விபத்து

## இளைஞன் உயிரிழப்பு

பண்டாரவளை-பதுளை வீதியில் திக்கராவ வளைவில் பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கி பயணித்த தனியார் பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டாரவளையில் இருந்து வெல்லவாய நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் வழுக்கிச் சென்று பேருந்தின் பின் சக்கரத்தில் சாரதியின் தலை சிக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்த இளைஞர் வெல்லவாய பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய்வர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும் விபத்து இடம்பெற்ற போது அப்பகுதியில் சிறியளவில் மழை பெய்ததாகக் கூறப்படுகின்றது.

(ம-7,10)

### புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில்

# குளவி கொட்டிற்கு இலக்கான மூவர் மருத்துவமனையில்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் இரண்டு பாடசாலை மாணவர்கள் உட்பட மூவர் குளவி கொட்டிய நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

வள்ளிபுனம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 46 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரும் வள்ளிபுனம் கல்லூரியில் கல்வி கற்கும் அவரின் 19 வயதுடைய மகள் மற்றும் 14 வயதுடைய மகன் ஆகியோருமே பாடசாலைக்கு செல்லும் வழியில் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மூவரும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

18

### இறப்பர்

1492 இல் புது உலகத்தில் கால் வைத்த கொலம்பஸ், அமெரிக்காவின் மத்திய தென் பகுதிகளில், இறப்பர் இயற்கையாகவே வளரும் மரமென்பதை முதன் முதற் கண்டறிந்தார். எனினும் பழைய உலகில் இறப்பரின் உபயோகம் 18 ஆம் நூற்றாண்டின் பிற் பகுதிவரை உணரப்பட்டதில்லை. 1772 இல் காகிதங்களிலுள்ள பென்சில் எழுததுக்களை அழிக்கும் தன்மை இறப்பருக்குண்டு எனக் கண்டுபிடித்த பிறீஸ்ற்லி அப்பொருளுக்கு "இந்திய இறப்பர்" எனும் பெயரை இட்டார்.

அரை நூற்றண்டுக்குப் பின்னர் மக்கின்ரொஷ் ரேப்பன்ரையின் திரவத்தில் கரைக்கப்பட்ட இறப்பரைக் கொண்டு நீர் புகா ஆடைகளை ஆக்கும் முறையினைக் கண்டறிந்து 1824 இல் நீர் புகா உடைகளை உற்பத்தி செய்யும் முதற் தொழிற்சாலையை அமைத்தார்.

1839 இல் சாள்ஸ் குட்டியர் வல்கனைஸ்படுத்தும் முறையினைக் கண்டுபிடித்ததன் விளைவாக, இறப்பர், உலகின் அதி முக்கிய மூலப் பொருள்களில் ஒன்றாகும் காலம் பிறந்தது.

1900இற்குப் பின் மோட்டார் வாகனங்களுக்கு "ரயர்கள்" செய்வதற்கு இறப்பர் இன்றியமையாததென அறியப்பட்டதுடன், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அதன் தேவை பன்மடங்கு அதிகரித்தது

### இறப்பர்ச் செய்கையின் ஆரம்பம்:

இறப்பர் பிரேசிலில் இயற்கையாக வளர்வதைக் கண்ட ஆங்கிலேயர், அதனைத் தம் குடியேற்ற நாடுகளில் பயிரிடுவதற்கான வாய்ப்பினை ஆராய்ந்தனர். பிரேசிலின் இறப்பர் மரங்களை நன்கு ஆராய்ந்தறிந்த சேர். ஹென்றி விக்ஹம் அது அயன மண்டலச் சுவாத்தியப் பிரதேசங்களில் பயிரிடுவதற்கு மிகவும் பொருத்தமான பயிர் எனும் முடிவுக்கு வந்தார்.

இந்தியாவில் இறப்பர் மரங்களைப் பயிரிடத் தீர்மானித்த இந்திய அரசாங்கம், இறப்பர் விதைகளைப் பெற்றுத் தருமாறு 1876 இல் சேர். ஹென்றியைப் பணித்தது. இவ்விதைகள் இங்கிலாந்தின் கியூ பூங்காவில் நாற்றிடப்பட்டு, சிறு கன்றுகளாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன. ஆனால் இந்தியாவின் சுவாத்தியம் இறப்பர்ச் செய்கைக்கு ஏற்றதன்று எனக் காணப்பட்டமையினால் அவை இலங்கைக்கு மாற்றியனுப்பப்பட்டன.

1876 இல் இலங்கை வந்தடைந்த இக்கன்றுகள், ஹெனரத்கொடைப் பூங்காவில் நாட்டப்பட்டன. இன்று இலங்கையில் பெரும் தோட்டப்பயிராக இருக்கும் இறப்பரின் முதல் வராறு இதுவேயாகும்,

இறப்பர் மரங்கள் 1876 இல் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் ஒழுங்கான பயிர்ச் செய்கை, இருபதாம் நூற்றண்டின் ஆரம்பம் வரை நிகழவில்லை. இவ்விடைக்காலத்தில் பிரித்தானியப் பேரரசு அடங்கலும் இலங்கையினின்றே இறப்பர் விதைகள் பரப்பப்பட்டன.

பிஜி, அவுஸ்ரேலியா, ஜமேக்கா, திறிணிடாட், ஜாவா, சன்ஸிபார், பர்மா எனுமிடங்களுக்கு இறப்பர் இலங்கையினின்றே பரவியது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தேயிலைத் தொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக, இறப்பர் தொழில் விருத்தியடைவதற்கு வேண்டிய சூழ்நிலைகள் தோன்றின. முதலாவதாக தேயிலையிலும் பார்க்க இறப்பருக்குக் குறைந்த கண்காணிப்புப் போதுமாயிற்று. தேயிலைச் செடியைப் போலல்லாது, இறப்பர்க் கன்றுகளைக் கண்காணியாமலும் விடமுடிந்தது.

இரண்டாவதாக, பால் வெட்டுவதற்கு வேண்டப்பட்ட கூலியாட்கள் மிகச் சொற்பம். மூன்றாவதாக இறப்பர்ப் பாலைப் பதப்படுத்துவதற்கு அதிக செலவு ஏற்படவில்லை. இறப்பரின் விலையுயர்ச்சி காரணமாகப் பெரிய தொழிற்சாலைகள், இறப்பர்ப் பாலை விரும்பி வாங்கலாயின.

நான்காவதாக, இறப்பருக்கு ஆரம்பம் தொடங்கி நல்ல விலை கிடைத்தது. கடைசியாக, தேயிலையிலும் பார்க்க இறப்பருக்குத் தேவைப்பட்ட நிலம் இலகுவில் பெறக்கூடியதாயிருந்தது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இறப்பர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டன. இறப்பர் உலர் வலையங்களுக்குரிய பயிராயிருப்பதனுல் அது இத்தீவின் அனலும் ஈரலிப்பும் மிகுந்த பிரதேசத்தில் நன்றாக செழித்து வளருகின்றது.

களனிப் பள்ளத்தாக்கு, இரத்தினபுரி மாவட்டம், கேகாலைப்பகுதி, மாத்தளைப்பகுதி முதலிய இடங்களே இறப்பர் பயிரிடப்பட்ட பிரதேசங்களாகும். இப்பிரதேசங்கள் யாவும் தென் மேற் பிரதேசத்தின் உயர் பகுதிகளில் காணப்படுகின்றன.

அக்காலத்தில், கீழைத் தேசங்களில் இறப்பர்த் தோட்டங்களில் முதலீடு செய்வதற்காக ஐரோப்பிய அமெரிக்க வர்த்தகக் கூட்டுக் கம்பனிகள் நிறுவப்பட்டன. இவ்விதமாக வெளிநாடுகளினின்று வந்த முதலீட்டின் ஒரு பகுதியை இலங்கை பெற்றது இதனால் பெரும் நன்மையடைந்த நாடு மலாயாவாகும். முதலாம் உலகப் போர்க் காலத்தில் இறப்பர்தான் வருவாய் தரும் பெரும் தொழிலாக அமைந்தது. 1914-18 வரை ஓர் இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் இறப்பர்ச் செய்கைக்கெனத் திறக்கப்பட்டன.

இறப்பர்ச் செய்கையின் இப்பெரும் விரிவு, சிறு காணிக்காரரான சுதேச விவசாயிகளுக்கும் நன்மை பயப்பதாயிற்று. ஏனெனில் விவசாயியும் அவனது குடும்பத்தினரும் அதனைத் தம் ஒய்வு நேரங்களில் செய்யக்கூடியதாயிற்று. 1914 இல் 30,000 ஏக்கராகவிருந்த இறப்பர் விளைவிக்கப்பட்ட சிறுகாணிகளின் நிலப்பரப்பு 1931 இல் 140,000 ஏக்கராக அதிகரித்தது.

உலகப் போரின் பின்னர் இறப்பர் விலைகள் வீழ்ச்சியுறத் தொடங்கின. இறப்பருக்கு முக்கிய சந்தையாக அமைந்த நாடு ஐக்கிய அமெரிக்க தேசமாகும். அந்நாடு உலக இறப்பர் உற்பத்தியில் 72 விகிதத்தை நுகர்ந்து வந்தது. 1920 - 22 அமெரிக்காவில் பொருளாதார மந்த நிலை எழுந்தபொழுது, அந்நாடு இறப்பர் வாங்குவதைக் குறைக்கவே, அதன்விலை துரிதமாகக் குறையத் தொடங்கிற்று.

1922 இல் பிரித்தானிய அரசாங்கம், ஸ்டீவன்சன் குழு சிபார்சு செய்த அறிக்கையினை மேற்கொண்டது. இது பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் இறப்பரின் விலைகளில் ஓர் உறுதியான நிலையை ஏற்படுத்தும் பொருட்டு, ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தி அமைக்கத் தீர்மானித்தது. மொத்த உற்பத்தியின் 60 விகிதம் ஒவ்வொரு நாட்டிலும் "ஏற்றுமதி கோட்டா" எனப் பெற்றது.

இச்சட்டம் 1922 நவம்பர் தொடக்கம் 1928 நவம்பர் வரை அமுலிலிருந்தது. இக்கட்டுப்பாடு தொடங்கிய ஈர் ஆண்டுகளுக்குள் விலைகள் உறுதியான நிலைகளை எய்தின. விலைகளின் ஏற்றத்தாழ்வுகளுக்கேற்ப ஏற்றுமதிக் கோட்டா காலத்துக்குக் காலம் குறைத்தும் கூட்டியும் நிர்ணயிக்கப்பட்டது.

பிரித்தானிய குடியேற்ற நாட்டு உற்பத்தியாளர்கள் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, உயர்ந்த விலைகளைப் பெற எடுத்த முயற்சியில் டச்சுக் கிழ்க்கிந்திய தீவுகள் பங்குபெற அறவே மறுத்தன. இதன் விளைவாக டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளில் இறப்பரின் பெருக்கம் அளவுப் பிரமாணமின்றி பல்கிப் பெருகியது. உலக உற்பத்தியில் அந்நாட்டின் பங்கு 40 விகிதமாக உயர்ந்தது.

கட்டுப் பாட்டுத் திட்டத்தில் டச்சுத் தீவுகள் தொடர்ந்து பங்கெடுக்க மறுக்கவே, 1928 இல் அத்திட்டம் பயனிழக்கலாயிற்று. பொருளாதார நெருக்கடி, இலங்கை இறப்பர் உற்பத்தியாளரை மிகவும் பாதித்தது.

### தென்னை

புராதன காலந்தொடங்கி இலங்கையில் வளர்ந்து வந்த பயிர்களில் தென்னையும் ஒன்று என்பதற்குச் சான்றுகள் பலவுள்ளன. அன்றும் இன்றும் இத்தீவின் ஒவ்வோர் இல்லத்திலும் தெங்குப் பொருள்கள் தவிர்க்க முடியாததொரு பண்டமாக இருந்து வருகின்றன. தாழ்பிரதேசங்களில் வாழ்ந்த விவசாயிகள், வீட்டின் சுற்றுப் புறத்தில் சில தென்னை மரங்களை வளர்த்து வந்தனர். இவற்றின் மூலம் உணவு, தளபாடம், மது ஆகியவற்றைப் பெற்றனர்.

தென்னை உற்பத்தியும் தென்னையுடன் தொடர்புடைய துணைத் தொழில்களும் நல்ல வருவாய் தருவனவாக இருந்தமையால், விவசாயிகள் தமது பிரதான தொழிலுடன், இதனையும் துணைத் தொழில்களாகக் கொண்டனர். இதன் காரணமாக தென்னை, இலங்கையின் உள் நாட்டுப் பொருளாதார அமைப்பினில் முக்கிய இடம் வகித்து வந்துள்ளது.

பல நூற்றாண்டுகளாக இலங்கையில் தென்னை பயிரிடப்பட்டு வந்தபோதிலும், 1860இற்குப் பின் அது வெளிநாட்டு வியாபாரங்களில் முக்கிய இடம் வகிக்கத் தொடங்கிய பின்னர்தான், அது துரிதமாகவும் முறைப்படியும் பயிரிட ஆரம்பிக்கப்பட்டது. 1860க்குப்பின் மேலைத் தேசங்களில் தேங்காய் எண்ணெய்க்கு மதிப்பு ஏற்படும்வரை, ஏற்றுமதி வர்த்தகத்தில் தெங்குப் பொருள்கள் இடம் பெறவில்லை.

ஏற்றுமதி வர்த்தகத்துக்கான தெங்குப் பொருளின் பெரும்பகுதி, விவசாயிகளிடமிருந்தே பெறப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடு கட்டச்...

பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை செல்வமகிந்தன் (வயது-46) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 16ஆம் திகதி இரவு 6.30 மணியளவில் மாடு கட்டுவதற்காக பற்றைகள் சூழ்ந்த பகுதிக்கு சென்றபோது அவரை புடையன் பாம்பு தீண்டியுள்ளது.

உடனடியாக வீட்டுக்கு வந்தவரை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,10,60)

## கிளி.நெத்தலி...

குறித்த சடலம் கிளிநொச்சி புளியம்பொக்கணை பகுதியில் உள்ள முசிலம்பிட்டியைச் சேர்ந்த 27 வயதுடைய சம்சுதீன் என்ற இளைஞனுடையது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தில் அடிகாயங்களும் காணப்படுவதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7,10,316)

## மோ.சைக்கிள்...

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது

இதில் வவுனியாவைப் பிறப்பிடமாகவும் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிறீஸ்கந்தராசா அரவிந்தன் (வயது-27) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

வீதியால் சென்று கொண்டிருந்த குறித்த 17 வயதுடைய இளைஞன் ஒருவர் உந்துருளியை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

17 வயதுடைய குறித்த இளைஞனை பொலிஸார் கைது செய்ததோடு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,60)

## நயினாதீவில்...

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக இளைஞர் பௌத்த சங்க சபையின் 20ஆவது வருடாந்த மாநாடு மற்றும் உலக பௌத்த முன்னணியின் 5ஆவது வருடாந்த மாநாடு நயினாதீவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை நயினாதீவு ரஜமகா விகாரையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு 27 நாடுகளில் இருந்து சுமார் 350 பௌத்த மத பிரதிநிதிகள் வருகை தரவுள்ளனர்.

இதனை ஒரு தேசிய நிகழ்வாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு இதற்கான அனைத்து முன்னாயத்த நடவடிக்கைகளும் ஜனாதிபதி செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## மன்னாரில்...

61 வயதுடைய எல்லாளன் என அழைக்கப்படும் நான்கு பிள்ளைகளின் தந்தையான தர்மராசா மரியயேசுதாசன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் பகல் 12.40 மணியளவில் தனது வயல் நிலத்திற்குச் சென்று நஞ்சருந்திய நிலையில் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டு முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக குடும்பஸ்தர் உயிரிழந்ததாகக் கூறப்படும் நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## யாழில் இடம்...

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"கடத்தல்கள், கைதுகள் மற்றும் வாள்வெட்டு ஆகியவற்றுக்கு மலிந்த இடமாக யாழ்ப்பாண மண் தற்போது மாறியுள்ளது...

ணுவத்தினரின் மறைகரம் உள்ளது.

அத்துடன், பொலிஸாரின் ஒத்துழைப்புகளும் உள்ளன. அவற்றை கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதே இதன்மூலம் வெளிப்படுகின்றது" எனத் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## ஜனாதிபதியின்...

நிராகரித்துள்ளது.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவைக்காலத்தை ஆறு மாதங்கள் நீடிக்கும் முன்மொழிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு சபைக்கு வழங்கியிருந்த நிலையில் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று அரசியலமைப்பு சபை கூடியபோதே ஜனாதிபதியின் பிரேரணை நிராகரிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் சஞ்சய்ராஜரத்தினம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ள நிலையில், அவரது சேவைக் காலத்தில் 6 மாதங்கள் நீடிக்கும் யோசனையை ஜனாதிபதி முன்மொழிந்திருந்தார் என்பது சுட்டிக் காட்டத்தக்கது. (ம-7,10)

## எந்த...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆண், பெண் சமத்துவச் சட்டமூலம் குறித்து பாராளுமன்றத்தில் இன்று (நேற்று) நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. ஆனால் அது தொடர்பில் கிடைத்துள்ள உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி பெண்களுக்கு சமவுரிமை இல்லை. நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையான பெண்களால் அந்த உரிமையைப் பெற முடியாது என்பது, இந்த நாட்டின் பாராளுமன்றத்திற்கும் அரசியலமைப்பிற்கும் எதிரான தீர்மானமாகவே கருத முடியும் என நான் பாராளுமன்றத்தில் தெரிவித்தேன்.

ஆண்களுக்கு நிகரான உரிமைகளை பெண்களுக்கு வழங்குவதே எங்கள் நோக்கம். சர்வதேச பெண்கள் அமைப்புகளின் அனைத்து ஒப்பந்தங்களிலும் இது சேர்க்கப்பட்டுள்ளது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் நீதித்துறை, ...

சட்டத்துறை அல்லது வேறு எந்த அமைப்பும் தலையிட முடியாது.

அந்தப் பணியை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளோம். எனவே இது தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என இன்று (நேற்று) நான் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தேன். அதேபோன்று, அந்தத் தீர்மானத்தினால் பௌத்த மதத்தின் பாதுகாப்பு நீக்கப்படலாம் என்பதால் அந்தக் கருத்தை ஏற்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது நாம் அது குறித்து அவதானம் செலுத்தி செயற்பட்டு வருகிறோம் என்றார். (ம-7,10)


லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (1270)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



மஹஜன சம்பத
திகதி 2024.06.18
சீட்டிழுப்பு இலக்கம் 5508
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
E 7 7 8 6 5 4
அத சம்பத
E 8 6 5 4
சீட்டிழுப்பு இலக்கம் 83
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1538
D 10 27 28 50 D
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Double Chance 06855

மெகா பவர்
திகதி 18/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1856
S 23 04 34 73 77
68683

லக்கி 7 VIP
திகதி 2024.06.18
சீட்டிழுப்பு இலக்கம் 0334
E 5 1 3 0 5 3 E

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3750
சீட்டிழுப்பு திகதி 18.06.2024
C 24 51 66 72
C 48677

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.18
சீட்டிழுப்பு இலக்கம் 0817
கடகம் 08 11 19 42 கடகம்
37990 02



உத்தியோகபூர்வ முடிவுகள்
18.06.2024 வெற்றி வாரம் 216 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து N
4 2 0 6 5 3
49786
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,237,704.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2482 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 18.06.2024 தினம் செவ்வாய்
வெற்றி இலக்கங்கள்
17 26 48 70 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,129,360.00
DLB

சனிதா
திகதி 2024.06.18 வெற்றி வாரம் 4643 வர்ணம் பச்சை
44 52 60 65 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,081,332.80
23272
DLB

சசிரி
491
2024.06.18
வெற்றி இலக்கங்கள்
19 22 38
08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,913,960/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4194 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.06.18 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் கும்பம்
02 13 17 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,992,454.00
176753
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 17 10 15 53 64
1658
18.06.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 528,422,311.00
DLB

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2308
சீட்டிழுப்பு திகதி : 2024.06.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 121,191,144.00
ADA KOTIPATHI
34 61 65 71 C
526072
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எதிர்வரும் 22 ஆம் திகதி வரை

# வடக்கில் மிதமான மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும்22 ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ் பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அதேவேளை இன்று முதல் தென்மேற்கு பருவக் காற்று மழையின் இரண்டாவது சுற்று ஆரம்பமாகும். இதன்மூலம் கொழும்பு, களுத்துறை, காலி, இரத்தினபுரி, நுவரெலியா, பதுளை மாவட்டங்கள் அடுத்து வரும் 7 நாட்களுக்கு கன மழை பெறும் வாய்ப்புள்ளது.

அதேவேளை அடுத்த வாரமளவில் மத்திய வங்காள விரிகுடாவில் காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் அடுத்த வார முற்பகுதியிலேயே இதனை உறுதிப்படுத்த முடியும் என்றார். (ம-7,10)

### மண்டைதீவு

# தில்லேஸ்வரத்தில் நாளை சங்காபிசேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலய சங்காபிசேகம் நாளை 20 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து அபிசேக ஆராதனைகளும் இடம்பெற்று மகேஸ்வர பூசையும் நடைபெறும். பூசை வழிபாடுகளை சிவஸ்ரீ தி.தர்சன் குருக்கள் நடத்தி வைப்பார். (ம)

றான கருத்துக்கள் மிகவும் தவறானவை. அரசியலமைப்பின் 9வது சரத்தில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் ஒருபோதும் இரத்து செய்யப்பட மாட்டாது.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அந்த கலந்துரையாடல்களில் தலைமை வகித்தவர் அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க.

அந்த கலந்துரையாடலில் அரசியலமைப்பின் 9வது சரத்தை மாற்றுவது குறித்து கலந்துரையாடப்படவில்லை. அனைவரும் 9வது சரத்தை ஏற்று கலந்துரையாடினர்.

அதனால் இது தேவையற்ற ஒரு அச்சம். 9 ஆவது சரத்தில் கை வைக்க மாட்டோம்.

அதில் கைவைக்க வேண்டிய தேவை தமிழ் அரசியல் தலைவர்களுக்கு கூட இல்லை என தெரிவித்தார்.

இலங்கையின் அரசியலமைப்பின்படி, 9 ஆவது சரத்தில் இலங்கை குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மைத் தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,10)

# பண்டத்தரிப்பில் சடலம் மீட்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சாந்தைப் பகுதியில் உள்ள விநாயகர் சன சமூக நிலைய கட்டடமொன்றிலிருந்து முதியவர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் துரைராசா என்ற 80 வயது மதிக்கத்தக்க முதியவராவார்.

9 பிள்ளைகளின் தந்தையான இவர் குடிபோதையில் விபரீத முடிவெடுத்து தூக்கிட்டு தனது உயிரினை மாய்த்துள்ளதாக தெரியவருகிறது. மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

## ஒன்றிணைந்த...

போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள் மீது பொலிஸாரால் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சகல வேலையற்ற பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. "தொழில் உரிமையாகும்" உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, போராட்டத்தினை கட்டுபடுத்துவதற்காக ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த நிலையில் போராட்டக்காரர்கள் மீது நீர்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7,10)

## கனடாவிலிருந்து...

பகுதியில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் செல்வரத்தினம் ஜெயதீபன் (வயது-45) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

தனது தந்தையின் அந்தியேட்டி கிரிகைகளில் கலந்து கொள்வதற்காக கடந்த ஒரு வாரத்திற்கு முன்னதாக நாட்டிற்கு வருகை தந்த குறித்தநபர் நேற்று முன்தினம் கிரியைகள் நடந்து கொண்டிருந்த வேளையில் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டதோடு உடற்கூற்று பரிசோதனைக்கும் அறிவுறுத்தினார். (ம-7,10)

## தமிழ்த்...

லண்டனில் இடம்பெற்ற நிகழ்வில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பௌத்த மதத்திற்கான அவதானங்கள் குறைவடையும் என பரவும் பேச்சுக்கள் தொடர்பில் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,எங்களுடைய எதிர்த்தரப்பினருக்கு எங்களை பற்றிய அவதூறான கருத்துக்களை பரப்புவது வேலையாக மாறியுள்ளது.

மத அடிப்படையில் வாழ்வது தேசிய மக்கள் சக்தி மாத்திரமே. இது தொடர்பில் சொல்லப்படும் அவதூ

புதிய காவலன் திருமண பொருத்துநர்
மாலி சந்தி, அல்வாய் - கோப்பாய்
மணமகன் தேவை
பிறந்த திகதி 29.06.1996 கேட்டை நட்சத்திரம் பாவம் 24 செவ்வாய் தோசம் இல்லாத 5 அடி 2 அங்குல உயரம் உள்ள Bio Medical Engineer ஆக கொழும்பில் வேலை செய்யும் பெண்ணுக்கு உயர் கல்வி கற்று கொழும்பில் வேலை செய்யும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு : 077 663 0273
(C-0628)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0626) 076 825 7716 (ஆகாஸ்)

புதிய காவலன் திருமண பொருத்துநர்
மாலி சந்தி, அல்வாய் - கோப்பாய்
மணமகள் தேவை
5 அடி, 11 அங்குல உயரமுடைய சிங்கப்பூரில் Telecommunication & Network Engineer ஆக வேலைபார்க்கும் மணமகனுக்கு IT Software Engineer/ Doctor/ CIMA/ MBA/ படித்து பட்டம் பெற்ற மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு : 077 663 0273
(C-0629)

நல்லூரில் வீட்டின் பகுதி வாடகைக்கு
இரண்டு பெண்கள் மட்டும் குடியிருக்கலாம்.
தனி அறை,
மிக சிறிய சமையல் அறை, இணைந்த குளியலறை,
பெரிய ஹோல் கொண்டது.
Rent - 16,000/=
Call :
071 223 4566
(1271)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS
துரித மீட்டல் வகுப்பு
கலை, வர்த்தகம்
ஆரம்பமாகி நடைபெறுகின்றன
திங், செவ், புதன், வியா, வெள்ளி ஐந்து நாட்களும்
காலை 7.00 - 11.00 மணிவரை
Note:
எமது கிளை நிறுவனங்களான பொருளியற் கல்லூரி – சுன்னாகம்
BARATHY - சித்தன்கேணி
நிறுவனங்களிலும் நடைபெறுகின்றன.
(C-0630)

ஆலய குருக்கள் தேவை
நவாலியில் பிரசித்திபெற்ற ஆலயமொன்றுக்கு ஆலய வீட்டில் தங்கியிருந்து ஆலய நித்திய பூஜைகளை செய்வதற்கு பிராமண குருக்கள் தேவை. சம்பளம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.
தலைவர்:- 077 690 6092
செயலாளர்:- 077 822 7381
(1267)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-0627)

வங்கி மீதி வசதி (Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 27 681
(1269)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0690)

Show Money
1%
லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான
வங்கி இருப்பு/ விசா சேவை
T.P : 075 033 6759
(1263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.